| பாடம் 9 | ஐரோப்பா-ஆசியாவின் தீபகற்பம் (Europe - Peninsula of Asia) |
|---|---|

**பாட அறிமுகம்**

இப்பாடத்தில் ஐரோப்பா கண்டத்தின் இருப்பிடம் பரப்பளவு, மற்றும் நிலத்தோற்றம், இயற்கை அமைப்பு தட்ப வெப்ப நிலையின் வகைகள், தாவரவகைகள், விவசாயம், கால்நடை வளர்த்தல் மீன்பிடித்தொழில், கனிமப்பொருட்கள், தொழிற்சாலை வளர்ச்சி, மக்கட்தொகை வளர்ச்சி, மக்கட்தொகை பங்கீடு மற்றும் அடர்த்தி பற்றிய விவரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**திறன்கள் :**

1. ஐரோப்பாவின் இருப்பிடம் அளவு மற்றும் நிலத்தோற்றம் பற்றி அறிவீர்.
2. ஐரோப்பாவின் இயற்கை அமைப்பு, தட்ப வெப்ப நிலையின் வகைகளைப் பற்றி அறிவீர்.
3. இயற்கைத் தாவர இனங்கள் மற்றும் தட்ப வெப்ப நிலைகளின் இடையேயுள்ள தொடர்பை அறிவிர்.
4. ஐரோப்பாவில் கிடைக்கும் கனிமப்பொருட்களின் அடிப்படையில் தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றதைப் பற்றிய விவரம் அறிவீர்.
5. ஐரோப்பாவின் சமசீரற்ற மக்கட்தொகை மக்கள் அடர்த்தி குடி பெயர்ப்பு போன்ற அம்சங்களைப் பற்றி விவரிப்பீர்.

❋ **முன்னுரை :** உலகின் அதிக மக்கட்தொகை மற்றும் நாகரீக வளர்ச்சி யடைந்த கண்டங்களில் ஐரோப்பாவும் ஒன்றாகும். கடல்வளம் மற்றும் தொழில்வளத்தில் முன்னேற்றம் அடைந்த கண்டமாகும். பரப்பளவில் உலகின் ஆறாம் இடத்தில் உள்ளது. இயற்கை வளங்கள் நிலத் தோற்றம். சமூக கலாச்சாரம் மற்றும் ஆட்சி அமைப்பினால் முன்னேற்றம் அடைந்த கண்டமாகும். பல பெரிய மற்றும் சிறிய நாடுகளைக் கொண்ட கண்டமாகும். மொத்தம் 56நாடுகள் உள்ளன.

©KTBS Not to be republished


# 1. இருப்பிடம் பரப்பளவு நிலத்தோற்றம்

**இருப்பிடம் :** ஐரோப்பா $10^0$ மேற்கிலிருந்து $60^0$ கிழக்கு தீர்கரேகை வரையிலும் $36^0$வடக்கிலிருந்து $72^0$ வடக்கு அட்சரேகை வரையிலும் பரந்துள்ளது.

**பரப்பளவு :** ஐரோப்பா உலகின் இரண்டாவது பெரிய கண்டமாகும். அதன் மொத்த பரப்பளவு 10.4 மில்லியன் சதுர கிலோ மீட்டர்களாகும். இது இந்தியாவின் பரப்பளவை விட மூன்று மடங்கு பெரியதாகும். பூமியின் நிலப்பரப்பில் ஐரோப்பா ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. ஆனால், உலகின் மொத்த மக்கட்தொகையில் 1/4 பகுதியே மட்டுமே ஐரோப்பா பெற்றுள்ளது.


**நிலத்தோற்றம் :**

ஐரோப்பா ஒரு பெரிய தீபகற்பமாகும். மூன்று பக்கம் நீரால் சூழப்பட்டுள்ளது. வடக்கே பேரண்ட் சமுத்திரத்தாலும், மேற்கே அட்லாண்டிக் சமுத்திரத்தாலும், தெற்கே மத்தியத்தரைக் கடலாலும் சூழப்பட்டுள்ளது.




**உலகவரைபடத்தில் ஐரோப்பாவின் நிலை**

©KTBS Not to be republished



**இருப்பிடம், பரப்பளவு மற்றும் நிலத்தோற்றம்**

*1. ஐஸ்லாந்து, 2. நார்வேஜியம் கடல், 3. பேரன்ட் கடல், 4. யூரோப்பியன் ரஷ்யா, 5. பின்லாந்து, 6. நார்வே, 7. ஐயர்லாந்து, 8. வடக்கடல், 9. டென்மார்க், 10. பால்டிக் கடல், 11. இஸ்டோனியா, 12. டால்வியா, 13. லிதுயா, 14. அட்லான்டிக் பெருங்கடல் 15. பெல்ஜியம், 16. நெதர்லாந்து, 17. போலந்து, 18. பெலரஸ், 19. பிரான்ஸ், 20. போர்ச்சுகல், 21. ஸ்பெயின், 22. சுவிட்சர்லாந்து, 23. ஜெக்குடியரசு 24. யூக்ரேன், 25. ஆஸ்த்ரியா, 26. ஸ்லொவாகியோ, 27. ஹங்கேரி, 28. ரொமேனியா, 29. க்ரோவியா, 30. இத்தாலி, 31. மால்டோவா, 32. ஏட்ரியாடிக் கடல், 33. பாஸ்னிமா, 34. யுகோஸ்லாவியா, 35. பல்கேரியா, 36. கருங்கடல், 37. மாசிடோனியா, 38. அல்பனியா, 39. ஆல்ஜியன் கடல், 40. கிரீஸ், 41. அயனியன் கடல், 42. ஆசியா, 43. காஸ்பியன் கடல், 44. ஆப்பிரிக்கா.*

ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியில் ஆசியா கண்டம் உள்ளது. யூரல் மலைகளும், ககாசஸ் மலைகளும், காஸ்பியன் கடலும் ஐரோப்பாவிலிருந்து ஆசியா கண்டத்தை பிரிக்கின்றன. தென் பகுதியில் ஆப்பிரிக்கா உள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பூகோள அமைப்புகள் ஐரோப்பா மற்றும் ஆசியாவின் இடையே நிலையான எல்லைகளாக இருப்பதில்லை.

எனவே இதனை ஒரே கண்டம் எனக் கருத்தில் கொண்டு ''யுரேஷியா'' என்ற ஒரே பெயரினால் அழைப்பர்.

## 2. இயற்கை அமைப்பு :

ஐரோப்பா கண்டம் வித்தியாசமான இயற்கை குணங்களைப் பெற்றுள்ளது. இக் கண்டத்தின் மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் பனியால்

©KTBS Not to be republished

மூடப்பட்டுள்ள சிகரங்களுள்ள மலைகள், கணவாய்கள், மேட்டு நிலங்கள் பள்ளத்தாக்குகள் மற்றும் சிறிய சமவெளிகள் உள்ளன. ஆனால் இக்கண்டத்தின் கிழக்குப் பகுதி அதிகமாக நிலையான பீடபூமியால் சூழப்பட்டுள்ளது. ஆங்காங்கு சில மாற்றங்கள் காணப்படுகின்றன.



**எல்ப்ரூஸ் சிகரம்**

ஐரோப்பா கண்டத்தின் மிக உயரமான சிகரம் ''மவுண்ட் எல்பர்ஸ்'' (5633 மீ) இது கக்காசஸ் மலைத் தொடரில் அமைந்துள்ளது. தாழ்வான இடம் காஸ்பியன் கடலாகும். இது கடல் மட்டத்திலிருந்து 28 மீ கீழுள்ளது.

உண்மையில் ஆசியா நிலப்பரப்பிலுள்ள பெரிய தீபகற்பமாகும். ஐரோப்பா ஆயிரக்கணக்கான தீபகற்பங்களைப் பெற்றுள்ளது. எ.கா: ஸ்கேண்டி நேவியா, சைபீரியா, ஐஸ்லாண்டு, பால்கன் தீபகற்பம் முதலானவை, எனவே இது ஆயிரக்கணக்கான தீவுகளாலான தீபகற்பம் என்று அழைக்கப்படுகிறது.

ஐரோப்பா 80,500 கி.மீ நீளமுள்ள கடலோரப் பகுதியாகும். இது ஆசிய கண்டத்தின் கடலோரப் பகுதியை விட நீளமானது. இக்கண்டத்தின் கடலோரப்பகுதிகளில், ஆயிரக்கணக்கான தீவுக் கூட்டங்கள் உள்ளன. அவற்றில் பிரிட்டன் மற்றும் ஐயர்லாந்து மிகப்பெரியவை. ஷெட்லாண்டு, ஃபைரோஸ், ஓர்க்கனி, சிசிலி சார்டினியா கோர்சிகா, கிரேட்டு மற்றும் சானெல் தீவுகள் முக்கியமானவை.

**இயற்கைப் பிரிவுகள் :**

இயற்கை சூழலுக்கு ஏற்ப, ஐரோப்பா நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. வடமேற்கு மலைத்தொடர்கள்
2. வடக்கில் உள்ள பரந்த சமவெளி
3. மத்திய பீடபூமி
4. தெற்கு மலைகள்


**1. வடமேற்கு மலைத்தொடர்கள் :**

இது பின்லாந்து, ஸ்வீடன், நார்வேயை உள்ளடக்கும். ஐயர்லாந்து, பிரிட்டன் வரையிலும் பரந்துள்ள மிகப் பழமையான சிகரங்களை கொண்டுள்ள மலைத்தொடர்களையும் உள்ளடக்கும். சிகரங்களின் மீது மூடப்பட்

©KTBS Not to be republished

டுள்ள பனி உருகி நதிகளாகும் போது இச்சிகரங்களின் உயரம் குறைகிறது. இம்மலைச் சிகரங்கள் கற்களால் ஆனது என்பது அங்குள்ள சான்றுகள் மூலம் அறிகிறோம். ஸ்கான்டி நேவியாவில் இதனுடைய உயரம் *2000 மீ* ஆகும். ஐயர்லாந்து நார்வேயிலுள்ள கோல்ட்ஹோ டோபிக்கன் *(2469 மீ)* வட ஐரோப்பாவின் உயரமான சிகரம் ஆகும் ஸ்காட்லாந்தில் அதனுடைய உயரம் *600மீ.* ஆகும். ஸ்காட்லாதிலுள்ள, பென்னேவிஸ் *(1343 மீ)* மற்றும் வேல்ஸின் ஸ்நோடோன் *(1085 மீ)* மற்ற சிகரங்களாகும். இப்பகுதியின் வடக்குத் திசையில் மெல்லிய சரிவு உள்ளது. இப்பகுதியில் பல நதிகள் பாய்கின்றன.

**2. வடக்கில் உள்ள பரந்த சமவெளிகள் (ஐரோப்பாவின் பரந்த சமவெளி) :** இதனை 'மத்திய தாழ்நிலம்' என்றும் அழைப்பர். இது கிழக்கே யூரல் மலைக-ளிலிருந்து மேற்கே அட்லாண்டிக் கடற்கரை வரையிலும் பரந்துள்ளது. ஐரோப்பாவின் பெரும்பகுதி இங்கு உள்ளது. யூரோப்பியன் ரஷ்யா, போலந்து, வடக்கு ஜெர்மனி, நெதர்லாந்து (ஹாலந்து) டென்மார்க், பெல்ஜியம், வடக்கு பிரான்சு மற்றும் இங்கிலாந்தின் கிழக்குப் பகுதி இதைச் சேரும்.




இயற்கை பிரிவுகள்

©KTBS Not to be Republished

இப்பகுதியின் கிழக்குப்பகுதி அகலமானதாகவும், மேற்குப்பகுதி குறுகியும் உள்ளது. நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் நாடுகளின் சில சமவெளிகள் கடல் மட்டத்தை விட கீழே உள்ளன. இவை நதிகள் கொண்டுவரும் வண்டல் மண் படிந்துள்ள சமவெளிகளாகும்.

இச்சமவெளிகள் இந்தியாவின் சிந்து-கங்கை சமவெளிகளைப் போல அகன்றவை அல்ல. சில பகுதிகளில் இச்சமவெளிகள் சரிவுகளைப் பெற்றுள்ளன. சில இடங்கள் சிகரங்கள் மற்றும் மலைத் தொடர்களினால் வேறுபடுகின்றன. இங்கு உலகிலேயே, சிறந்த வளமான வேளாண் பூமிகள் உள்ளன.

**3. மத்திய பீடபூமி :** இவை பழமையான கற்களால் ஆனவை. பல பழமையான சிகரங்கள், மலைகள் மற்றும் பீடபூமிகளைப் பெற்றுள்ளன அவைகளின் சராசரி உயரம், கடல் மட்டத்தில் இருந்து 600 மீ விட அதிகமில்லை.

இப்பகுதி மேற்கே அயர்லாந்து மற்றும் கிழக்கே ரஷ்யா வரை பரந்துள்ளது. ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலின் மெசட்ட, பிரான்சின் மத்திய மாசிப் மற்றும் வோஸ்ஜேஸ், ஜெர்மனியின் பிளாக் ஃபாரஸ்ட் மற்றும் ஜெக் ஸ்லோவோகியா குடியரசு நாடுகள், குறைந்த உயரம் உள்ள பல தொடர்கள் இதைச் சேரும்.

சிலபகுதிகளில் காடுகள் உள்ளன. பல பகுதிகள் பாறைக் கற்களால் ஆனவை. இங்குள்ள மண்வளமையானதும், வேளாண்மைக்கு உகந்ததாகவும் உள்ளது. நதிக்கரைகள் சிறந்த வேளாண் நிலங்களைத் தருகின்றன.

**4. தெற்கில் உள்ள மலைத்தொடர்கள் :** இப்பகுதியை **ஆல்பைன்ஸ் மலைத் தொடர்** என்றும் அழைப்பர். இவற்றில் பல மலைத் தொடர்கள் உல்ளன. அவை சியெர்ரா மோரெனா (ஸ்பெய்ன்), பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினின் இடையே எல்லையாகத் திகழும் பிரனீஸ் மலைகள் ஆகும். இவை மேற்கு அட்லாண்டிக் கரையிலிருந்து காஸ்பியன் கடல் வரையிலும் சம இடைவெளித் தொடர்களாகப் பரந்துள்ளன. இவை இமயமலையைப் போல முடிச்சு மலைகளாகும். இங்குள்ள ஆல்ப்ஸ் மலைத் தொடர்கள் முக்கியமானவை. உயரமான



**பிளாங்க் சிகரம்**

சிகரம் மௌன்ட் பிளாங்க் (4807 மீ) ஆகும். ஆல்ப்ஸ் மலைத்தொடர்கள், பிரான்சின் தென்கிழக்குப் பகுதி, இத்தாலியின் வடப்பகுதி, சுவிட்சர் லாந்தின் பெரும்பகுதி, ஜெர்மனி, ஆஸ்ட்ரியா மற்றும் ஸ்லோவேனியா பகுதிகளில் பரந்துள்ளன. இத்தாலியின் பெரும்பகுதிகளில் அபனைன் மலை, குரீஷியா, போஸ்னியா மற்றும் யுகோலோவியாவின் டினாரிக் ஆல்ப்ஸ், பல்கேரியாவின் பால்கன் மற்றும் வட ஸ்லோவேனியா வில் கார்ப்பேதியன் மலைகளும் உள்ளன.

## 3. தட்ப வெப்ப நிலையும், இயற்கைத் தாவரங்களும்

ஐரோப்பாவின் தட்ப வெப்ப பிரதேசங்களைப் பற்றி தர்க்கம் செய்வதற்கு முன்பு அதனுடைய பொதுவான தட்ப வெப்ப நிலையைப் பற்றி அறிய லாம். இக்கண்டத்தின் அதிகமான பகுதிகள் 'சம சீதோஷ்ண மண்டலத்தி லுள்ள தட்ப வெப்ப நிலையை'ப் பெற்றுள்ளன. இதை 'மித தட்ப வெப்ப நிலை' என்றும் அழைப்பர். தட்ப வெப்ப நிலையின் மீது விளைவுகளை ஏற்படுத்தும் காரணிகள் அட்சரேகை, மேற்பரப்பு அம்சங்கள், காற்றுகள் ஆகும். ஆயினும் கண்டத்தை முழுவதுமாக சூழ்ந்து கொண்டுள்ள அட்லாண்டிக் பெருங் கடலிலிருந்து வீசும் காற்றுகள், இக்கண்டத்தின் தட்ப வெப்ப நிலையின் மீது அதிகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. கல்ஃப் ஸ்ட்ரீம் வெப்பக் கடற்காற்றுகளும், புகழ்பெற்ற மேற்கு காற்றுகளும் இதற்கானமுக்கிய காரணங்களாகும்.


பொதுவாக, தென் ஐரோப்பாவின் குளிர்ச்சியான குறைந்தகால கோடையைவிட வடக்கில் நிலவும் குளிர்காலம் நீண்டகாலம் வரையிலும் குளிர் அதிகமாகவும் உள்ளது. வெப்பம் அதிகமாகவுள்ள குறைந்த கால கோடையையும் இது எதிர்கொள்கிறது.

**தட்ப வெப்ப நிலை பிரதேசங்கள் :**

தட்ப வெப்ப நிலையின் அடிப்படையில் ஐரோப்பாவை நான்கு பிரதேசங் களாகப் பிரிக்கலாம்.

***1.வடமேற்கு ஐரோப்பாவின் கடலோர தட்ப வெப்ப நிலை பிரதேசம்:*** இப்பிரதேசம் நார்வே கடலோர பகுதியிலிருந்து ஸ்பெயினின் வடக்கு மற்றும் மத்திய ஐரோப்பாவின் உள்நாடு வரை பரவி யுள்ளது. மிதமான குளிர்காலம் வெதுவெதுப்பான கோடை காலம் மற்றும் போதுமான அளவு மழை, மேகம் மூட்டத்துடனும் இருள் சூழ்ந்த பகலும், இத்தட்பவெப்ப நிலையின் முக்கிய அம்சங்களாகும். குளிர்காலத்திலும், கோடைகாலத்திலும் வெப்ப நிலை சாதாரணமாக (10 ° செ மற்றும் 18 ° செ) ஆகும். மழையின் பங்கீடு அதிகப் பட்சம் (75 செ.மீ) ஆக உள்ளது.

© KTBS Not to be republished




வருடாந்திர வெப்ப அளவு பங்கீடு




மழைப் பங்கீடு

Not to be republished ©KTBS

**2. கண்டங்களிடையேயுள்ள தட்ப வெப்ப நிலைப் பிரதேசம் :** இத்தட்ப வெப்ப நிலை பெரும்பாலும் போலந்து, ஸ்லோவாகிய, ஜெக் குடியரசு, ஹங் கேரி, ருமேனியா மற்றும் பல்கேரியாவில் நிலவுகிறது. இத்தட்ப வெப்ப நிலையின் அம்சங்கள்-குளிர்ச்சியான குளிர்காலம், வெதுவெதுப்பான கோடைக்காலம் (-12 ° செ மற்றும் 10 ° செ) மற்றும் சராசரி ஆண்டு மழை 50 செ.மீ. ஆகும். கோடைகாலத் தொடக்கத்தில் மரபுவழி (Converctional) மழை பெய்கிறது.

**3. மெடிட்டரேனியன் தட்ப வெப்ப நிலைப் பிரதேசம் :** அதிக அளவு வெப்பம், வறட்சி மற்றும் வெப்பத்துடன் கூடிய கோடைகாலம் மற்றும் குறைவான மழையுடன் கூடிய, மிதமான குளிர்காலம் இத்தட்பவெப்பநிலையின் முக்கிய குணங்கள் ஆகும். குளிர் காலத்தில் சராசரி வெப்ப அளவு 8 °செல்சியஸ் மற்றும் கோடை காலத்தில் 22 ° செல்சியஸ் ஆகும். சராசரி ஆண்டு மழை 75லிருந்து 100 செ.மீ. ஆகும். இப்படிப்பட்ட நிலை தட்பவெப்ப மெடிட்டரேனியன் கடற்பகுதிகள் உள்ளடக்கிய தென் ஐரோப்பாவில் காணலாம்.

**4. மலைப்பகுதியில் நிலவும் தட்ப வெப்ப நிலை :** இந்த தட்ப வெப்ப நிலை ஆல்ப்ஸ் மலை மற்றும் ககாகஸ் மலைப்பகுதிகளில் காணப்படுகிறது. இது, உயரம் சூரிய கதிர்களின் கோணம் மற்றும் காற்றினால் கட்டுப்படுத்தப் படுகிறது. குளிர்காலத்தில் வெப்ப அளவு 4° செ. மற்றும் கோடைகாலத்தில் 16°செ. ஆகும். சராசரி மழைப்பங்கீடு, மலைக் காற்று க்கு எதிர் பகுதியில் 50 செ.மீ. மற்றும் காற்றின் முகச்சரிவு பகுதிகளில் 200 செ.மீ. ஆக உள்ளது. மிக உயரமான பகுதிகளில், வெப்ப அளவு உறைநிலையை விடக் குறைவாக உள்ளது.

**இயற்கை தாவரங்கள் :**

ஐரோப்பாவில் பலகாலங்களாக மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இங்கு அதிக மக்கள் அடர்த்தியும் உண்டு. ஆகவே இயற்கை தாவரங்கள் முழுமையாக அகற்றப் பட்டுள்ளன. மக்களுக்கு பயன்படாத மற்றும் உயர்ந்த பகுதிகளில் மட்டுமே இத்தாவரங்கள் காணப்படுகின்றன. ஐரோப்பாவில் கீழ்க் காணும் ஆறு வகைத் தாவர வகைகள் உள்ளன.

©KTBS Not to be republished

**1. துந்திரப்பகுதி தாவரங்கள் :** பாசிவகை தாவரங்கள் (Lichens and Mosses) காணப்படுகின்றன. ஐஸ்லாந்தின் குறுகிய பகுதியையும் நார்வே, சுவீடன், பின்லாந்தின் வடப்பகுதிகளையும் இது உள்ளடக்கும். இப்படிப்பட்ட தாவரங்கள் ஆல்ப்ஸ் மற்றும் யூரல் மலைகளின் உயர்ந்த பகுதிகளில் காணப்படுகின்றன.

**2. தைகா காடுகள் :** நார்வே, சுவீடன் மற்றும் பின்லாந்து உள்ளடக்கிய உயர தீர்க ரேகை பிரதேசங்களில் காணப்படுகின்றன. இங்கு சில வகை மரங்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவைகளை **ஊசியிலைக் காடுகள்** என்றும் அழைப்பர். இக்காடுகளில் ஸ்காட்ஸ்பைன், ஸ்ப்ரூஸ் மற்றும் லார்ச் போன்ற மரங்கள் வளருகின்றன. இவற்றின் இலைகள் ஊசி போன்று கூர்மையாகவும் சங்கு போன்ற வடிவமும் பெற்றுள்ளன.


**3. கலப்புக் காடுகள் :** தென் மையப் பகுதியில் இக்காடுகள் காணப்படுகின்றன. இங்கு இலையுதிரும் மற்றும் ஊசியிலை மரங்களும் வளர்கின்றன. முக்கியமான மரங்கள் ஓக், ஆஷ், எல்ம், பாப்லர், வில்லோ, பீச் முதலியன.

**4. மத்தியத் தரைக் கடல் தாவரங்கள் :** சாதாரணமாக இக்காடுகள் மத்தியத் தரைக்கடல் (மெடிட்டரேனியன் கடல்) ஓரங்களில் காணப்படுகின்றன. இத்தாவரங்கள் அகலமான இலைகளைக் கொண்ட பசுமைத் தாவரங்கள் ஆகும். ஏனென்றால் வறண்ட காலத்திலும், இத்தாவரங்களின் இலைகள் உதிர்வதில்லை. கார்க் ஓக், ஆலிவ், லாரெல், போன்ற மரங்கள் இங்கு வளர்கின்றன.

**5. புல்வெளிகள் :** இலையுதிர்காடுகளின் தென் பகுதியில் காணப்படுகின்றன.எ.கா: ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா மற்றும் யுரோப்பியன் ரஷ்யா. இது குறைவான மரங்கள் மற்றும் புற்கள் உள்ள ஸ்டெப்பீஸ் புல் வகையாகும்.

**6. ஆல்பைன்ஸ் தாவரங்கள் :** ஐரோப்பாவின் தென் பகுதியின் உயர்ந்த மேட்டு நிலைப்பகுதியில் சூழ்ந்துள்ளன. எ.கா: ஆல்ப்ஸ், பிரனீஸ், பால்கன், கார்ப்பேத்தியன் மற்றும் தினாரிக் மலைகள்.

©KTBS Not to be republished




ஐரோப்பாவின் இயற்கைத் தாவரங்கள்

*1. ஐஸ்லாந்து, 2. நார்வேஜியன் கடல், 3. பாரன்ட் கடல் 4. பின்லாந்து, 5. நார்வே, 6. சுவீடன், 7. பால்டிக் கடல், 8. வடக் கடல் 9. அயர்லாந்து, 10. ஐக்கிய நாடுகள், 11. அட்லான்டிக் பெருங்கடல் 12. பிரான்சு, 13. ஜெர்மனி, 14. நெதர்லாந்து, 15. எஸ்டானியா, 16. லரிதவியா, 17. லிதுவானியா, 18. போலந்து, 19. பெலாரஸ், 20. யுரோப்பியன் ரஷ்யா 21. ஜெக், 22. சுவிட்சர்லாந்து, 23. ஆஸ்ட்ரியா, 25. ஸ்லொவேனியா,26. ஹங்கேரி, 27. ரொமேனியா சியர்ரா மான்டி நீக்ரோ, 28. குரோஷியா, 29. குரேஷியா, 30. ஸலோவேனியா, 31. மாசிடோனியா, 32. பல்கேரியா, 33. அல்பேனியா, 34. ஏஜியன் கடல், 35. அயனியன் கடல், 36. போர்ச்சுகல், 37. ஸ்பெயின், 38. மெடிட்டரேனியன் கடல், 39. ஆசியா, 40. காஸ்பியன் கடல்*

## 4. வேளாண்மை, கால்நடை வளர்த்தல் மற்றும் மீன் பிடித்தல்

**வேளாண்மை :** தொழிலாக்கத்திற்குப் பிறகும் ஐரோப்பாவில் வேளாண்மையே முக்கியத் தொழிலாக விளங்குகிறது. இக்கண்டம் பரந்த, சமதளமான, செழிப்பான நிலம் மற்றும் சிறப்பான நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றிருப்பதில் அதிர்ஷ்டசாலியாகும். இங்குள்ள தட்ப வெப்ப நிலை வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது.

ஸ்காண்டி நேவியாவின் நாடுகளைத் தவிர ஐரோப்பாவின் பல நாடுகள் அவற்றின் பரப்பளவில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பகுதிகளை

வேளாண்மைக்கு பயன்படுத்துகிறார்கள். ஐரோப்பாவின் சராசரி வேளாண் பகுதிகளின் அளவு 10 ஹெக்டேர்களாகும்.

மேற்கு ஐரோப்பா நாடுகளில் கலப்பு விவசாய முறைகள் பழக்கத்தில் உள்ளன. இது விளைச்சல் மற்றும் கால்நடை வளர்த்தல், இரண்டையும் உள்ளடக்கும். உழுது பயிரிடத்தக்க நிலங்களை கால்நடை தீவனப் பயிர்களை விளைக்கவும், கோழி வளர்த்தல், பன்றி வளர்த்தல், பல வகைப் பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை விளைக்கப் பயன்படுத்து கிறார்கள்.

தென் ஐரோப்பாவின்மெடிட்டரேனியன் தட்பவெப்ப நிலையுள்ளதால் வேளாண்மை முறைகளில் வேற்றுமைகள் உள்ளன. அது தானியப்பயிர்கள், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றின் சாகுபடி மற்றும் கால்நடை வளர்த் தலையும் உள்ளடக்கும்.

பெரிய சந்தைகளுக்கேற்ப சிறப்பான விசேஷ விவசாய முறைகளில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதிகமான மக்களடர்த்தியுள்ள நகரப் பகுதிகளினருகே வேளாண்மை சிறப்பான முறையில் நடைபெறுகிறது. ஐரோப்பாவில் 10 விழுக்காட்டிற்கும் குறைவானோர் வேளாண்மையில் ஈடுப டுகின்றனர்.

மேற்பரப்பு அம்சங்கள், மண், தட்பவெப்ப நிலை, சந்தை மற்றும் வேளாண்மையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையை சார்ந்து, ஐரோப்பாவின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பயிர் வகைகளை விளைவிக்கிறார்கள்.

**கோதுமை,** ஐரோப்பாவின் முக்கிய உணவு தானியம் ஆகும். பாரீஸ் பள்ளத்தாக்கு, ஐரோப்பாவின் பெரிய சமவெளி ஹங்கேரி நிலப்பரப்பு, தாழ்ந்த சமவெளி நாடுகள் மற்றும் இத்தாலியின் ''போ'' நதி பள்ளத்தாக்கு போன்றவை ஐரோப்பாவின் முக்கிய கோதுமை விளையும் நிலங்கள் ஆகும்.

மக்காச்சோளம் ஐரோப்பாவின் இரண்டாம் முக்கிய தானியமாகும். பிரான்ஸ், இத்தாலி, ஹங்கேரி, ஜெர்மனி மற்றும் ஸ்பெயின் மக்காச்சோளம் விளையும் முக்கிய நாடுகள் ஆகும். ''ரை'' மற்றொரு உணவுப்பயிர் ஆகும். இது பெரும்பாலும் பிரெட் (ரொட்டி) மற்றும் மதுபானம் தயாரிக்கப் பயன்படுகிறது. போலந்து, ஜெர்மனி, ஜெக் மற்றும் ஸ்லோ வாகிய குடியரசு நாடுகள் ''ரை'' பயிரிடும் முக்கிய நாடுகள் ஆகும். பார்லி உற்பத்தியிலும் ஐரோப்பா முன்னிலையில் உள்ளது. இதை உணவு தானிய மாகவும், மாடுகளுக்கு தீவனமாகவும் மதுபானம் தயாரிப்பிலும் பயன்படுத் துகிறார்கள். சில பகுதிகளில் ''ஓட்ஸ்'' பயிரிடப்படுகிறது. நெற்பயிர் மிகக் குறைந்த அளவில் பயிரிடப்படுகிறது. இது கோடைப் பயிராகும்.

©KTBS Not to be republished

**சர்க்கரை வள்ளிக்கிழங்கு மற்றும் பட்டாடோ (உருளைக்கிழங்கு)** ஐரோப்பாவின் இரண்டு முக்கிய கிழங்கு வகைகளாகும். சர்க்கரைவள்ளிக் கிழங்கு சர்க்கரை தயாரிப்பதற்கும் மாட்டுத் தீவனமாகவும் பயன்படுத் துகின்றனர்.

உருளைக்கிழங்கு பெரும்பாலும் மத்திய கிழக்கு ஐரோப்பா சமவெளி பகுதியில் பயிரிடப்படுகிறது. உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஐரோப்பா உலகிலேயே முதலிடம் பெற்றுள்ளது. சணல் (Flax) ஐரோப்பாவின் முக்கிய நார் பயிர் ஆகும்.

ஐரோப்பாவின் மலைச் சரிவுகளில் திராட்சை, ஆப்பிள், அத்தி, சாத்துக் குடி, எலுமிச்சை, பிளம், மாதுளை, செஸ்ட்நட் முதலிய பழவகைகள் பயிரி டப்படுகின்றன. பல்கேரியா, ரோஜாப்பூ, காய்கறிகள் மற்றும் தோட்டப்பயிர் களுக்கு சிறப்பானது.

**கால்நடை வளர்த்தல் :** ஐரோப்பாவின் கலப்பு வேளாண் முறையில் கால்நடை வளர்த்தல் சிறப்பு வாய்ந்தது. குளிர்ந்த ஈரமான தட்பவெப்பநிலை, அடர்ந்த மக்களடர்த்தியுள்ள நகரங்கள், வசதியான சாலைகள் இரயில் போக்குவரத்து, சிறந்த உயிரியல். தொழில்நுட்ப முன்னேற்றம், குளிர்சாதன முறைகள், வணிகமாதிரி கால்நடை வளர்த்தலில் இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் தீவனத் தேவைகளைச் சந்தித்தல் போன்றவை ஐரோப்பாவின் கால்நடை வளர்த்தலில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.



**ஐரோப்பாவின் கால்நடை வளர்த்தல்**



©KTBS Not to be republished

டென்மார்க், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளில் கால்நடை வளர்த்தல் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. டென்மார்க், கால்நடை வளர்த்தலில் புகழ் பெற்றது. ஐரோப்பா நாடுகள் பால் பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது. எ.கா: வெண்ணெய், கடும்பால், சீஸ், கிருமிநீக்கப்பட்ட பால், சாக்லெட் முதலியன.

***மீன் பிடித்தல் :*** வரலாறு முழுவதும் மீன் ஐரோப்பாவின் உணவாக உள்ளதை நாம் காண்கிறோம். குறைவான ஆழமுள்ள கடற்பகுதியில் மீன் பிடித்தல் முக்கியமாக நடைபெறுகிறது. வடமேற்கு ஐரோப்பா சிறந்த மீன்பிடிப் பகுதிகளாகும் அவை ஆர்டிக் வட்டப் பகுதியிலிருந்து மெடிட்டரேனியன் கடல் வரை பரந்துள்ளது. வடக்குக் கடல் புகழ்பெற்ற மீன்பிடித்தல் பிரதேசமாகும். அதில் நார்வே, பிரிட்டன், டென்மார்க், ஸ்வீடன் மற்றும் ஜெர்மனி சேரும். டாகர் பேங்க் மற்றும் கிரேட் பிஷர் பேங்க்வடக்குக் கடலின் இரண்டு சிறந்த மீன் பிடிப்பிரதேசங்களாகும். நார்வே மக்கள் மீன் பிடித்தலில் சிறந்தவர்கள். சீல் மற்றும் திமிங்கலம் துருவப் பிரதேசங்களில் பிடிக்கப்படுகின்றன. நார்வே அதிகமான மீன்களை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் நாடாகும்.




**ஐரோப்பாவின் மீன்பிடிப் பகுதிகள்**

வேளாண் நிலங்கள் மற்றும் உணவு தானியவகைகளின் குறைபாட்டினால் ஐரோப்பாவில் மீன் பிடித்தொழில் முன்னேற்றம்அடைந்துள்ளது.

©KTBS Not to be republished

## 5. கனிமப்பொருட்கள் மற்றும் சிறந்த தொழிற்சாலைகள்

ஐரோப்பா கண்டத்தில் பல்வேறு வகையான கனிமப்பொருட்கள் மற்றும் ஆற்றல் மூலங்கள் உள்ளன.

இக்கண்டத்தில் அதிக அளவு இரும்பு கனிமப்பொருட்கள் உற்பத்தியாகின்றன. ஐரோப்பாவின் பல நாடுகளில் இரும்பு கனிமப் பொருட்கள் கிடைக்கின்றன. உலகில் உள்ள மொத்த இரும்பு கனிமப்பொருட்களில் சுமார் 5 சதவீதம் ஐரோப்பாவில் கிடைக்கின்றது. பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் மற்றும் சுவீடன் மிகச்சிறந்த இரும்பு கனிமப்பொருள் கிடைக்கும் நாடுகளாகும்.

பல்கேரியா மற்றும் போலந்து புகழ்பெற்ற தாமிரம் தயாரிக்கும் நாடுகளாகும். ஐரோப்பாவில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிப்பொருட்கள் மிகக் குறைவு மிகச் சிறந்த பெட்ரோலியம் தயாரிக்கும் பகுதிகள் வடகடல், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ஜெர்மனி ஆகும்.




கனிம வளங்கள்

©KTBS Not to be republished

நிலக்கரி, ஐரோப்பாவின் முக்கியமான மின்சக்தி மூலமாகும். ஸ்கான்டிநேவியா மற்றும் மெடிட்டரேனியன் நாடுகளைத் தவிர இக்கண்டம் முழுவதும் நிலக்கரி புதையல்கள் உள்ளன. உயர்தர பிட்டுமினஸ் நிலக்கரி யுரோப்பியன் ரஷ்யா, ஜெர்மனி மற்றும் பிரிட்டனில் பரவியுள்ளது. சில இடங்களில் பாக்ஸைட் மற்றும் பொட்டாஷ்களும் கிடைக்கின்றன.

**முக்கிய தொழிற்சாலைகள் :**

**இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் :** நவீன யுகமானது, இரும்பு மற்றும் எஃகு யுகமாகும். இது பெரிய தொழிற்சாலை மற்றும் பல சிறிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரும்பு மற்றும் எஃகைத் தயாரிக்கிறது. முக்கியமான இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி செய்யும் பிரதேசங்கள் : ஜெர்மனி ; ருஹுர், சார், வெஸர் நதிக்கரைகள் மற்றும் பெர்லின் பிரதேசம் 2. பிரிட்டன் ; பிளாக் கன்ட்ரி, ஷெபீல்ட், வடகிழக்கு கடற்கரைப்பகுதி மற்றும் வேல்ஸ் பிரதேசம் 3. பிரான்ஸ் ; லோரைன் வடமேற்கு மற்றும் கிழக்கு எல்லைப்பகுதிகள், போலந்தின் சைலீசியா, இத்தாலியின் போ நதிப்பள்ளத்தாக்குகள் மற்றும் லம்பார்டி நிலப்பரப்பு.

**பருத்தி ஆடை தொழிற்சாலைகள் :** ஐரோப்பாவிலும் பல வேளாண்-ஆதார தொழிற்சாலைகள் வளர்ச்சியடைந்துள்ளன. அவற்றில் பருத்தி ஆடை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் ஒன்றாகும். ஐரோப்பா முழுவதும் பருத்தி ஆலைகள் உள்ளன. வேறு நாடுகளிலிருந்து கச்சா பருத்தியை இறக்குமதி செய்கிறார்கள். பிரிட்டன் நவீன பருத்தி தொழிற்சாலைகளின் பிறப்பிடமாகும். இங்குள்ள லங்கஷைர், ஜெஷைர் மற்றும் டார்பிஷைர் முக்கிய பருத்தி ஆலைகளுள்ள மையங்களாகும். ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் மற்ற சிறந்த பருத்தி ஆடை தயாரிக்கும் பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகளாகும்.

தரமான பட்டு, கம்பளி ஆடை, கைத்தறி ஆடைகளுக்கு பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் இத்தாலி நாடுகள் புகழ்பெற்றவை.

**கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் :** இது பெரிய என்ஜினியரிங் மற்றும் தொகுக்கும் (assembling) தொழிற் சாலையாகும். தொழில் நுட்ப முன்னேற்றம், சிறந்த துறைமுக வசதிகள்,தொழிற்சாலை முன்னேற்றம் முதலியன இத்தொழில் வளர்ச்சிக்கான காரணங்களாகும். ஐரோப்பாவில் ஜெர்மனி சிறந்த கப்பல் கட்டும் நாடாகும். ஸ்வீடன், பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் கப்பல் கட்டும் மற்ற நாடுகளாகும்.

**தானியங்கி வாகன தொழிற்சாலை :**

**வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் :** இவை கார், டிரக், பேருந்து, ஸ்கூட்டர் முதலிய மோட்டார் என்ஜின் மூலம் இயங்கும் பிற வாகனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகும். இது தொகுக்கும் தொழிற்சாலையுமாகும். மிகச்சிறந்த தொழில் நுட்பம் மற்றும் அதிக முதலீடு செய்ய வேண்டிய தொழில் ஆகும். ஜெர்மனி பிரான்சு, இத்தாலி

©KTBS Not to be republished

மற்றும் பிரிட்டன் மிகச்சிறந்த தானியங்கி வாகனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளைக் கொண்ட நாடுகளாகும்.

### 6. ஐரோப்பாவின் மிகச்சிறந்த தொழிற்சாலைப் பகுதிகள்:

ஐரோப்பாவின் மிகச்சிறந்த தொழில் மற்றும் தொழில் மையங்கள் ஒரு முக்கோண வடிவில் இணைகின்றன. இதை ஐரோப்பாவின் தொழிற்சாலை இருதயம் என்பர். இந்த முக்கோணம் வடக்கு சமுத்திரத்திலிருந்து போலந்தின் மத்தியப்பகுதி மற்றும் தென் இத்தாலியின் 'போ' நதிப்பள்ளத்தாக்கிலிருந்து வட ஸ்வீடன் வரையிலும் பரந்துள்ளது.

ஐரோப்பாவின் சிறந்த தொழில் மையங்கள் கீழ்வருமாறு :

1. பிரிட்டனின் தொழிற்சாலைப் பகுதிகள்.
2. மேற்கு முக்கோண தொழில் மையம்
3. பேரிஸ் தொழில் மையம், ''பிரான்ஸின் தொழிற்சாலைகளின் இதயம்'' என்பர்.
4. லோரைன்-சார் தொழில் மையம்
5. ரைன் நதியின் மேற்பள்ளத்தாக்கு மையம்
6. சைலேசியாவின் மேற்பள்ளத்தாக்கு மையம்
7. தெற்கு ஸ்காண்டிநேவியாவின் மையம், ஸ்பார்க் ஹோமை உள்ளடக்குகிறது.
8. கிழக்கு ஜெர்மனியில் இருந்து வடகிழக்கு ஜெக்கோஸ்லோவாகியா மையம்
9. வட இத்தாலியின் தொழில் மையத்திலுள்ள 'போ' நதியின் சமவெளி

### 7. மக்கட் தொகை :

ஐரோப்பாவின் நிலப்பரப்புக்கு ஒப்பிட்டு பார்க்கும் பொழுது அதனுடைய மக்கட் தொகை அதிகமாக உள்ளது. ஐரோப்பியன் ரஷ்யா நாட்டைத் தவிர, உலகின் நிலப்பரப்பில் 11 விழுக்காட்டு நிலப்பரப்பை ஐரோப்பா பெற்றுள்ளது. ஆனால் உலகின் மொத்த மக்கட் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியை மட்டுமே பெற்றுள்ளது.

அதனுடைய மொத்த மக்கட்தொகை 738.2 மில்லியன்கள் (2010). இதில் நகரங்களில் வாழும் மக்கட் தொகையின் விழுக்காடு அதிகம்.

**மக்கள் தொகைப் பங்கீடு :**

ஐரோப்பாவில் மக்கள் தொகைப் பங்கீடு சமமாக இல்லை. ஜெர்மனி, பிரிட்டன், இத்தாலி மற்றும் பிரான்ஸ், ஐரோப்பாவின் அதிகமான மக்கள்தொகையுள்ள நாடுகள் ஆகும். வடமேற்கு ஐரோப்பாவில் மக்கள் அடர்த்தி குறைவு. ஆல்ப்ஸ், ககாசஸ், அரேஸுஸ்க பிரதேசமுள்ள தென் கிழக்கு ஐரோப்பாவின் பகுதிகளில் மக்கள் அடர்த்தி குறைவாக உள்ளது.


©KTBS Not to be republished

ஐரோப்பாவின் அதிக மக்கள் அடர்த்தியுள்ள நாடுகள் பெல்ஜியம், லக்சம் பர்க், நெதர்லாந்து முதலியன ஆகும். இதற்கு தொழிலாக்கம், போக்குவரத்து, இயற்கை வளங்கள் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியே முக்கிய காரணங்களாகும்.

**வளர்ச்சி :** ஐரோப்பாவின் பல நாடுகளில் குறைந்த மக்கட் தொகையும், மக் கட்தொகை பெருக்கத்தில் சரிவும் ஏற்பட்ட நிலைமையைக் காண்கிறோம். மக்கட்தொகை அதிகரிப்பு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறுபடுகிறது.

**குடிபெயர்ப்பு :** சுமார் 200 வருடங்களாக ஐரோப்பியர்கள் மற்ற நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். பல்வேறு காரணங்களால் வேற்று நாட்டு மக்கள் ஐரோப்பாவிற்கு குடிபெயர்ந்து அங்கேயே தங்கி வாழ்கின்றனர்.

இரண்டாம் உலகப்போருக்கு பிறகு வேற்று கண்டங்கள் மற்றும் நாடுகளில் இருந்து மக்கள் பிரிட்டனுக்கு குடிபெயர்ந்துள்ளனர். அதில் பெரும்பாலோர் இத்தாலியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.




**மக்களடர்த்தி**

©KTBS Not to be republished

இரண்டாம் உலகப்போருக்கு முன்பு ஜெர்மனியர்கள் வெவ்வேறு நாடுகளுக்கு குடிபெயர்ந்து உள்ளனர். போலந்து, ருமேனியா, ஹங்கேரி, ஸ்லோவாகியா செக் குடியரசு மற்றும் யுகோஸ்லோவியாவில் ஜெர்மனியர் சிறுபான்மையினராக தென்பட்டனர்.

**மக்கள் அடர்த்தி :** ஐரோப்பாவின் மக்கள் அடர்த்தியில் வேற்றுமைகளைக் காணலாம். புகழ் பெற்ற நெதர்லாந்தில் ஒவ்வொரு சதுர கி.மீ.க்கு 950 மக்கள் இருந்தால் ஐஸ்லாந்தின் (ஐயர்லாந்தில்) ஒரு சதுர கி.மீ. 3 மக்கள் மட்டுமே உள்ளனர். வட ஐரோப்பாவில் தாழ்நிலப் பகுதிகளில் மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ளது.

ஐரோப்பாவின் அதிக மக்கள் அடர்த்தியுள்ள பிரதேசங்கள், தொழிற்மைய ஜில்லாக்கள், பெல்ஜியம் மற்றும் ஜெர்மனியின் நிலக்கரி பிரதேசங்கள், கிரேட்டர் லண்டன், நெதர்லாந்து, ரைன் நதி சமவெளி, வட இத்தாலி மற்றும் ஸ்பெயினின் கடலோரப் பகுதிகள் ஆகும்.

குறைந்த மக்கள் அடர்த்தி உள்ள பிரதேசங்கள், மத்திய பிரான்சு,மலைப் பகுதிகள் பால்கன் பிரதேசம் மற்றும் ஸ்காட்லாந்தின் மேட்டுநிலப் பகுதிகள் ஆகும்.

**புதிய சொற்கள் :**

ஆல்பைன், ஆல்ப்ஸ், தானியங்கி, சணல்நார், இருட்டான, முடிச்சு மலைகள், கடலோர தட்பவெப்ப நிலை மாசிஃப் மெசட்டா, குடிபெயர்ப்பு, தீபகற்பம், டைகா ஜவுளி தொழிற்சாலை.

**உங்களுக்குத் தெரியுமா?**

1. ஸ்காண்டிநேவியா, வடஐரோப்பாவின் பகுதியைச் சேரும் இது நார்வே, ஸ்வீடன் மற்றும் பின்லாந்துகளை உள்ளடக்கும்.
2. பிரிட்டன் அல்லது கிரேட் பிரிட்டன், ஐரோப்பாவின் மிகப்பெரிய தீவு. ஸ்காட்லாந்து, வேல்ஸ்களை உள்ளடக்கும். வட அயர்லாந்து உட்பட்ட ஐக்கிய நாடுகள் (U.K) என்றழைக்கப்படுகின்றது.
3. சுமார் 500 வருடங்களுக்கும் மேலாக ஐரோப்பாவை உலகத்தின் இருதயப் பகுதி என்று அழைத்து வந்தனர்.

©KTBS Not to be republished

4. பிளாக் பாரஸ்ட் என்பது காடு அல்ல. அது ஒரு மலைப்பகுதி. தெற்கு ஜெர்மனியில் உள்ளது. இதன் உட்பகுதி அடர்ந்த காடுகளால் இருண்டு காணப்படுவதால் இப்பெயர் வந்துள்ளது.

**குழுக்களில் விவாதித்து விடையளி:**

1. ஐரோப்பாவின் நிலத்தோற்றத்தை பற்றி எழுதவும்.
2. ஐரோப்பாவை 'ஆசியாவின் தீபகற்பம்' என்றழைப்பர் ஏன்?
3. ஐரோப்பாவின் இயற்கை பிரிவுகளைக் குறிப்பிடவும்?
4. ஐரோப்பாவின் சிறந்த மலைகள் மற்றும் சிகரங்கள் யாவை?
5. ஐரோப்பாவின் சிறந்த தட்ப வெப்ப நிலைப் பிரதேசங்கள் யாவை?
6. ஐரோப்பாவின் சிறந்த இயற்கை தாவர வகைகளைக் குறிப்பிடவும்.
7. ஐரோப்பாவின் புகழ்பெற்ற கால்நடை வளர்க்கப்படும் நாடுகள் யாவை?
8. ஐரோப்பாவின் முக்கிய உணவுப் பயிர்கள் யாவை?
9. ஐரோப்பாவின் முக்கிய மீன் பிடித்தல் மையங்கள் யாவை?
10. ஐரோப்பாவின் முக்கிய கனிமப் பொருட்கள் யாவை?

**செயல்பாடுகள் :**

1. வரைபடத்தில் ஐரோப்பாவின் முக்கிய இயற்கை பிரிவுகளைக் குறிப்பிடவும்.
2. உங்கள் ஆசிரியரின் உதவி பெற்று, ஐரோப்பாவின் முக்கிய மலைகள் மற்றும் சிகரங்களை குறிப்பிடவும்.
3. உங்கள் சுற்றுப்புறத்தை கவனித்து நிலத்தோற்றம், தாவரங்கள் மற்றும் பயிர்களைப் பட்டியலிடவும்.
4. ஐரோப்பா வரைபடத்தில் நாடுகளின் தலைநகரங்களின் பெயர்கள், சுற்றுலா இடங்கள் மற்றும் தொழில் மையப் பிரதேசங்களை குறிப்பிடவும்.

©KTBS Not to be republished

| பாடம் 10 | # ஆப்பிரிக்கா - மத்திய கண்டம் (Africa - The Central Continent) |
|---|---|

**பாட அறிமுகம்**

இப்பாடத்தில் நீங்கள் ஆப்பிரிக்காவின் இடம், பரப்பளவு, இயற்கை அமைப்பு, நதி அமைப்பு, தட்ப வெப்ப நிலை, இயற்கைத் தாவரங்கள், விலங்குச் செல்வம், வேளாண்மை, தொழிற்சாலைகள், விலையுயர்ந்த கனிமங்கள், மக்கட்தொகை பெருக்கம், பங்கீடு மற்றும் மக்களடர்த்தியைப் பற்றி அறிவீர்கள்.

**திறன்கள் :**

1. ஆப்பிரிக்காவின் இடம், பரப்பளவு, நிலஅமைப்பு மற்றும் இயற்கை அமைப்பு பற்றி அறிவீர்கள்.
2. ஆப்பிரிக்காவிலுள்ள முக்கிய நதி அமைப்பு, தட்பவெப்ப நிலையும் அவற்றின் பிரதேசங்களும், இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குச் செல்வத்தைப் பற்றி அறிவீர்கள்.
3. வேளாண்மை, தொழிற்சாலை மற்றும் விலையுயர்ந்த கனிவளம் பற்றி அறிவீர்கள்.
4. ஆப்பிரிக்காவின் மக்கட்தொகை, வளர்ச்சி பங்கீடு மற்றும் அடர்த்தி பற்றி அறிவீர்கள்.

❋ **முன்னுரை :** ஆசியாவிற்கு அடுத்தாக, ஆப்பிரிக்கா உலகின் இரண்டாவது பெரிய கண்டமாகும். மக்கட் தொகைப் பெருக்கத்திலும் இது இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. இக்கண்டம் 'இருட்டு கண்டம்' என்று அழைக்கப்பட்டது. இதற்கான காரணம், இங்கு பெரும்பாலும் கருமை நிற மக்கள் (Negroes) இருப்பதால் அல்ல, அங்குள்ளநிலைமைக்கு மாறாக பீட பூமிகளின் விளிம்புகள் கடற்கரை வரையிலும் பரவி இருப்பது மற்றும் வடக்கே சஹாரா வரையில் பாலைவனங்கள் இருப்பதால், வெளியுலகத்திற்கு வெகுநாட்கள் தென்படாமல் இருந்ததே அதற்கான காரணமாகும். இது 52 நாடுகளைக் கொண்டுள்ளது.


©KTBS Not to be republished

# 1. இருப்பிடம், பரப்பளவு மற்றும் நிலத்தோற்றம்

**இருப்பிடம் :** ஆப்பிரிக்கா கண்டம் 37° மற்றும் வடக்கு 35° தெற்கு அட்சரேகை மற்றும் 17° மேற்கு மற்றும் 50° கிழக்கு தீர்கரேகை நடுவே உள்ளது. ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதியில் பிரதான தீர்கரேகை, வடக்கும்-தெற்குமாக செல்கிறது. கடகரேகை மற்றும் மகரரேகைகள் இரண்டும் இக்கண்டத்தின் வழியே பாய்ந்து செல்வது இதன் சிறப்பு அம்சமாகும். நிலநடுக்கோடு ஏறக்குறைய இக்கண்டத்தின் மையப்பகுதியில் பாய்ந்து செல்வதால், இதனை 'மத்திய கண்டம்' என்றழைப்பர்.


**பரப்பளவு :** ஆப்பிரிக்காவின் மொத்த பரப்பளவு 30.4 மில்லியன் ச.கி.மீ. ஆகும். இது தெற்கே 8000 கி.மீ. நீளம் மற்றும் கிழக்கு-மேற்கே 7400 கி.மீ. அகலம் உள்ளது. ஆல்-கிரம் (டுனீசியா) ஆப்பிரிக்காவின் வடக்கு உச்சி மற்றும் அகுல்ஹாஸ் முனை (தென் ஆப்பிரிக்கா) தென் உச்சியாகும்.

**நில அமைப்பு :** ஆப்பிரிக்காவின் பல பகுதிகள் சமுத்திரம் அல்லது பெருங் கடல்களால் சூழப்பட்டுள்ளன. வடக்கே மெடிட்டரேனியன் கடல், தெற்கே அட்லாண்டிக் கடல் கிழக்கே செங்கடல் மற்றும் இந்து மகா சமுத்திரத்தினால் சூழப்பட்டுள்ளது. முன்பு, இக்கண்டத்தின் வடகிழக்குப் பகுதி சினாய் தீபகற்பத்தின் மூலம் ஆசியாவுடன் இணைந்திருந்தது.




**உலகத்தில் ஆப்பிரிக்காவின் இடம்**


©KTBS Not to be republished




**ஆப்பிரிக்கா கண்டத்தின் இடமும் நில அமைப்பும்**

இப்பொழுது அது சூயஸ் கால்வாயினால் பிரிகிறது. ஆப்பிரிக்கா ஜிப்ரால்டர் ஜலசந்தியினால் ஐரோப்பாவிலிருந்தும் அரேபிய, தீபகற்பத்திலிருந்து செங்கடலினாலும் பிரிகிறது. ஆப்பிரிக்கா கண்டத்தின் கடற்கரை 30,500 கி.மீ. நீளமாகும்.

©KTBS Not to be republished




மகா பிளவுப் பள்ளத்தாக்குகள்


# 2. இயற்கை அமைப்புகள்

ஆப்பிரிக்கா கண்டத்தின் இயற்கை அமைப்புகள் அதன் உள்ளமைப்புகளைப் பிரதிபலிக்கின்றன. இக்கண்டம் முழுவதுமாக ஒரு பரந்த பீடபூமியாகக் கருதப்படுகிறது. அது பழங்கால ஸ்படிகக் கற்களால் ஆனது. சிறிய கடற்கரை சரிவு எல்லையிலிருந்து இது எழுகிறது. எனவே இக்கண்டத்தின் உள்நாடுகளுக்குச் செல்வது கடினமாகும். பீடபூமி, தென்கிழக்கு பகுதியில் உயரமாகவும், வடகிழக்குப் பகுதியில் மென்மையான சரிவையும் பெற்றுள்ளது. ஆப்பிரிக்காக் கண்டத்தின் அளவுடன் ஒப்பிடும்பொழுது, அது மற்ற கண்டங்களை விட குறைவான உயரமுள்ள மலைகள் மற்றும் தாழ்நிலங்களைப் பெற்றுள்ளது.

ஆப்பிரிக்காவின் கடற்கரை, ஏறக்குறைய நேராக உள்ளது. அது சில பெரிய தாழ்நிலங்கள் இயற்கைத் துறைமுகங்கள் மற்றும் நதிமுகத்துவாரங்களைப் பெற்றுள்ளது. அங்கு விரிகுடா மற்றும் வளைகுடா இல்லை. அதுமட்டுமல்லாமல் கடற்கரையின் உட்பகுதிகள் ஆழமாகக் குடையப்பப-ட்டுள்ளன.

**மகா பிளவுப் பள்ளத்தாக்குகள் :** இரண்டு அல்லது இரண்டு தாழ்நிலங்களுக்கிடையேயுள்ள நிலப்பகுதியின் சரிவினால் உருவான சமதள பள்ளத்தாக்கைப் 'பிளவு பள்ளத்தாக்கு' என்றழைப்பர். ஆப்பிரிக்காவின் பிளவுப்பள்ளத்தாக்கு மிகவும் நீளமானது (6900 கி.மீ.) எனவே இதை 'மகா பிளவு பள்ளத்தாக்கு' என்று அழைப்பர்.

©KTBS Not to be republished




## இயற்கைப் பிரிவுகள்

ஆங்கில 'y' எழுத்தின் வடிவத்திலுள்ள மிகப்பெரிய இப்பிளவுப்பள்ளத் தாக்கானது, ஆப்பிரிக்கா கண்டத்தின் தெளிவான மற்றும் குறிப் பிடத்தக்க இயற்கை அமைப்பாகும். இது தென் மொஜாம்பிக்கிலிருந்து மாலவி, டான்ஜானியா, கென்யா மற்றும் இதியோபியா வழியாக செங்கடல் ஆக்யூபா வளைகுடா, சாக்கடல் காலிலி சமுத்திரம் வரைச் சென்று சிரியாவிலுள்ள ஜோர்டன் பள்ளத்தாக்கில் முடிவு பெறுகிறது.

**ஆப்பிரிக்காவின் தாழ்நிலப்பகுதிகள் :**

ஆப்பிரிக்காவில் ஐந்து முக்கியமான தாழ்நிலப்பகுதிகள் உள்ளன. அவை வருமாறு.

*1.* சுடான் தாழ்நிலப்பகுதி வெள்ளை மற்றும் நீல நைல் நதிகள் பாயும் பிரதேசமாகும். உலகிலேயே அதிகமான பரப்பளவுள்ள இந்த சதுப்பு நிலத்தை 'சட்' (Sudd) என்று அழைப்பர்.


*2.* சாட் (Chad) தாழ்நிலப்பகுதி சாட் ஏரியினால் சூழப்பட்டுள்ளது. இதுவும் சதுப்பு பிரதேசமாகும் மற்றும் சஹாரா பாலைவனம் இதை சூழ்ந்துக் கொண்டுள்ளது.

*3.* ஜோக்ஃப் (Djouf) தாழ்நிலப்பகுதி சஹாரா பாலைவனத்தின் மேற்குப் பகுதியை உள்ளடக்கும் மற்றும் மாரிடானியா. மாலி எல்லை முழுவதும் பரந்துள்ளது. இதன் வழியாக நைஜர் நதி பாய்கிறது.

*4.* காங்கோ (ஜைரே) தாழ்நிலப்பகுதி பெரிய கட்டமைப் பான தாழ்நிலப் பகுதி மற்றும் பீடபூமியினால் ஆனது. இதன் மூலம் காங்கோவும் அதன் கிளை நதிகளும் பாய்கின்றன. இது ஒரு காட்டுப் பகுதியாகும்.

*5.* கலஹரி தாழ்நிலப்பகுதி, பெரும்பாலும் பாலைவனம் மற்றும் ஸ்டெப்பீஸ் புல் வெளிப்பகுதிகளாகும். இது பீடபூமிகளினால் சூழப்பட்டுள்ளது.

**ஏரிகள் :** ஆப்பிரிக்கா கண்டம் பொருளாதார விருத்திக்கு துணை புரியும் பல ஏரிகளைப் பெற்றுள்ளது. அவற்றில் எட்டு முக்கியமானவை. கிழக்கு ஆப்பிரிக்காவில் மிகப்பெரிய மற்றும் ஆழமான ஏரிகளுள்ளன. அவை அத்தனையும் பொதுவாக பிளவுப் பள்ளத்தாக்குகளுடன் தொடர்பு பெற்றுள்ளன. பிளவுப் பள்ளத்தாக்குகளின் மேற்கே




**தாழ்நிலப்பகுதிகள்**

©KTBS Not to be republished

ஆல்பர்ட், எட்வர்ட், கிவி, டாங்கனிகா மற்றும் நியாசா ஏரிகளுள்ளன. அது மட்டுமல்லாமல் பிளவு பள்ளத்தாக்குகளின் கிழக்கே ருடால்ஃப் (டுர்க்கானா) நட்ரோன் மற்றும் இயாசி ஏரிகளுள்ளன.

டாங்கனிகா ஏரி உலகிலேயே இரண்டாவது ஆழமான ஏரியாகும். அது சுமார் 1436 மீ. ஆழமானது. பிளவு பள்ளத்தாக்குகளின் இரண்டு வரிசைகளின் இடையேயுள்ள விக்டோரியா ஏரியானது ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய ஏரியாகும். அது சுமார் 69.481 ச.கி.மீ, வரை பரந்துள்ளது. இங்கு நைல் நதி உருவாகிறது.

**மலைகள் :** ஆப்பிரிக்கா கண்டத்தில் அதிக மலைகள் இல்லை. ஆப்பிரிக்காவின் சமவெளிகளை முறியடிக்க சில சிறுச்சிறு மலைத்தொடர்கள் உள்ளன. அவற்றில் அட்லஸ் தொடர்கள் டிரேகன்ஸ்பர்க் மலைகள் மற்றும் கிலிமாஞ்ஜரொ மலைகள் முக்கியமானவை.

**அட்லஸ் தொடர்கள் :** இது இந்தியாவின் இமயமலைத் தொடர்களைப் போல் முடிச்சு மலைகளாகும். இது தென் ஐரோப்பா மலைகளின் தொடர்ச்சியாகும். மௌன்ட் டாப்கால் உயரமான சிகரமாகும். அட்லஸ் தொடர்கள் அல்ஜீரியா, மொராகோ மற்றும் டுனீஷியா பகுதிகள் வரையிலும் பரந்துள்ளன.

**டிரேகன்ஸ்பர்க் மலைகள் :** ஆப்பிரிக்காவின் தென்கிழக்கு கடற்கரை முழுவதும் பரந்துள்ளன. மலைகளென்று அழைக்கப்பட்டாலும் இவை பீடபூமிகளின் சரிவு எல்லைகளாகும்.

**கிலிமாஞ்ஜரொ மலைத் தொடர்கள் :** இம்மலைத் தொடர்கள் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ளன. இது ஆப்பிரிக்கா கண்டத்தின் மிக உயரமான சிகரங்களைப் பெற்றுள்ளன. உயரம் 5.895 மீட்டர்களாகும். நிலநடுக்கோட்டிற்கு அருகே இருந்தாலும், இதன் சிகரம் எப்பொழுதும் பனியால் மூடப்பட்டுள்ளது. அதனுடைய உயரமே இதற்கான காரணமாகும்.




**கிலிமாஞ்ஜரொ மலை**

©KTBS Not to be republished


(மேல்கண்டவைகளைத் தவிர ஆஹாகார், டிபெஸ்டி, ரூவென்ஜீரி, கேப் தொடர் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவின் மலைத்தொடர்கள் ஆப்பிரிக் காவின் மற்ற மலைகள் ஆகும்).

ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த சிகரம் கிலிமஞ்சாரோ மற்றும் மிகத் தாழ் வான பிரதேசம் அசல் (ஜிபோடி) ஏரி ஆகும்.

**சூயேஜ் வளைகுடா :** பரந்த நில அமைப்புகளை இணைக்கும் மற்றும் இரண்டு நீர்பகுதிகளை வேறுபடுத்தும் சிறிய நிலப்பகுதி 'வளைகுடா' ஆகும். வளைகுடாக்களில் சுவெஸ் சிறப்பானது.




சூயேஜ் வளைகுடா



சூயேஜ் கால்வாய்

©KTBS Not to be republished

சூயேஜ் வளைகுடா இது மெடிட்டரேனியன் சமுத்திரம் மற்றும் செங்கடலின் இடையே அமைந்துள்ள சிறிய வளைகுடா ஆகும். இது ஆப் பிரிக்காவையும், ஆசியாவையும் இணைக்கிறது. தற்போதைய ஆப்பிரிக்கா நாடுகளில் ஒன்றான எகிப்து நாட்டை இந்த வளைகுடாப் பகுதி இணைக்கிறது. மற்றும் இது ஆப்பிரிக்காவின் வடகிழக்கு பகுதியில் உள்ளது. இதை வெஸ் கால்வாயை அமைக்க தோண்டியுள்ளனர். இந்த கால்வாய் சிறப்பான செயற்கைக் கால்வாயாகும். மெடிட்டரேனியன் சமுத்திரத்தையும் செங்கடலையும் இணைக்கின்றது. இது உலகிலேயே பல கப்பல்கள் செல்லும் கடல்வழியாகும் மற்றும் ஐரோப்பாவையும், ஆசியாவையும் குறைந்த தொலைவில் இணைக்கிறது.

## 3. நீர் வளங்கள்

**ஆப்பிரிக்காவின் நதிகள்**

ஆப்பிரிக்காவின் நதி அமைப்புகள் சிறப்பானவை. பல நதிகள் அதனுடைய மேற்பகுதியில் பாறை இடுக்குகளை உருவாக்கியுள்ளன. நீர்வீழ்ச்சிகள் வேகமான நீரோற்றத்தைப் (Rapids) பெற்றுள்ளன. பருவ மழையின் பங்கீட்டின் விளைவாக பருவங்களின் அரைக்காலம் வரை மட்டுமே நதிகள் பாய்கின்றன. முழுக்கால கப்பல் போக்குவரத்திற்கு இது ஏற்றதல்ல. எப்பொழுதும் பாய்ந்து ஓடும் நதிகள் மிகவும் குறைவு. உள்நாட்டு நதிகளே இங்கு அதிகம்.

ஆப்பிரிக்கா கண்டம் நான்கு முக்கியமான நதிகளைப் பெற்றுள்ளது. அவை - நைல்நதி, காங்கோ (ஜைரே), நைஜர், ஜாம்பெஜி நதிகளாகும். ஆப்பிரிக்காவின் மற்ற சிறப்பான நதிகள் - சேனேகல், ஆரெஞ்சு மற்றும் லிம்போபோ ஆகும்.

**நைல்நதி :** உலகிலேயே மிக நீளமானது. இதன் நீளம் 6,650 கி.மீ. ஆகும். விக்டோரியா ஏரியிலிருந்து நைல் நதியாக உருவாகி சஹாரா பாலைவனத் திற்கு வடக்கே பாய்ந்து, மெடிட்டரேனியன் கடலைச் சேருகிறது. நைல் நதிக்கரை மிகவும் செழிப்பானதும் மக்களின் வாழ்க்கைத் துணை யாகவும் விளங்குகிறது. மக்கள் அதனுடைய நீரை நீர்பாசனத்திற்காக பயன்படுத்தி வாழ்க்கையை நடத்துகிறார்கள் அதனுடைய மிகப் பெரிய இடதுகரை உபநதி. அல்-கஜல், நீலநைல் அட்பாரா என்பன வலதுகரை உபநதிகளாகும்.

©KTBS Not to be republished




**ஆப்பிரிக்காவின் நதிகள்**

நீள நைல் நதி தானா ஏரியில் (இதியோபியா) உருவாகி கார்டூம் என்னும் இடத்தில் வெண் நைலைச் சேருகிறது. நைல்நதி உலகிலேயே புகழ்பெற்ற கழிமுகங்களை (delta) உருவாக்கியுள்ளது. இந்நதியில் அமைக்கப்பட்ட அணைகட்டுகளில் ஆஸ்வான் பெரியதாகும்.

**காங்கோ நதி :** காங்கோ அல்லது ஜைரே நதி ஆப்பிரிக்காவின் நீளமான நதிகளில் இரண்டாவதாகும். ஆப்பிரிக்க மக்கள் இந்த நதியை வெவ்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கின்றனர். இது உருவாகும் இடத்தில் இந்த நதியை **'லுவாபுலா'** என்றும் மீதமுள்ள பகுதியை 'லுவாலாபா' என்றும் அழைப்பர்.

காங்கோ நதி நிலநடுக்கோட்டிற்கு அருகில் உருவாகி முதலில் வடக்குத் திசையிலும் பிறகு தென்மேற்கு திசையிலும் 4640 கி.மீ. தொலைவு வரை பாய்ந்து, கழிமுகங்களை உருவாக்காமல் அட்லாண்டிக் பெருங்கடலை அடைகிறது. இது ஆப்பிரிக்காவின் மத்திய பாகத்தில் நிலநடுக்கோட்டுக் காடுகளினிடையே பாய்கிறது. அங்கு புகழ்பெற்ற லிவிங்ஸ்டன் நீர்வீழ்ச்சியை அமைத்துள்ளது.

**நைஜர் நதி :** ஆப்பிரிக்காவின் மூன்றாவது நீளமான நதியாகும். இது மேற்கு கடற்கரைப் பிரதேசத்தின் உயரமான பகுதியில் உருவாகி, அட்லாண்டிக் பெருங்கடலைச் சேருகிறது. இது வருடந்தோறும் நிரம்பி ஓடும் நதியல்ல. இதன் நீளம் 4000 கி.மீ. ஆகும்.

©KTBS Not to be republished



விக்டோரியா நீர்வீழ்ச்சி

**ஜாம்பெஜே நதி :** ஆப்பிரிக்காவின் நான்காவது முக்கிய நதியாகும். இது தென் ஆப்பிரிக்கப் பகுதியின் புகழ்பெற்ற நதியாகும். இது மத்திய ஆப்பிரிக்காவில் பிறந்து தென்கிழக்கே பாய்ந்து இந்து மகா சமுத்திரத்தைச் சேருகிறது. இது தன்னுடைய பாதை முழுவதும் போதுமான அளவு நீர்வீழ்ச்சிகளை அமைத்துள்ளது. அவற்றில் புகழ் பெற்றது விக்டோரியா நீர்வீழ்ச்சியாகும். இந்த நதி பல ஆழமான பள்ளத் தாக்குகளின் வழியாகப் பாய்கின்றது. அவற்றில் 'கரிபகந்தரா' புகழ்பெற்றதாகும். இந்த நதியின் நீளம் சுமார் *3500* கி.மீ.கள் ஆகும்.

**செனெகல் நதி :** இது கினியிலுள்ள பௌட்டா ஜாலன் பீட பூமியிலிருந்து உருவாகிறது. வடமேற்குத் திசையில் சுமார் *1640* கி.மீ. வரைப் பாய்ந்து கடைசியில் அட்லாண்டிக் பெருங் கடலை அடைகிறது. மாரிடானியா மற்றும் செனெகல் பிரதேசங்களுக்கிடையே அவற்றின் எல்லையாக விளங்குகிறது.

## 4. தட்ப வெப்ப நிலை, இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகள் :

**தட்ப வெப்ப நிலை :** அதிக நீளமாகவும், அகலமாகவும் உள்ள ஆப்பிரிக்கா கண்டம் வட அரைக்கோளம் மற்றும் தென் அரைக்கோளம் வரையிலும் பரந்துள்ளது. ஆதலால் இதை மத்திய கண்டம் என்றும் அழைக்கலாம். இக்கண்டத்தில் நிலநடுக்கோடு செல்வதால் சூரியனின் கதிர்கள் நேராக விழுகின்றன. எனவே இக்கண்டத்தில் வெப்ப மண்டலத்திலுள்ள தட்ப வெப்ப நிலையுள்ளது. அதுமட்டுமல்லாமல் வேறு அம்சங்களும் இக்கண்டத்தின் மீது விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அவை உயரமான மலைகள் இல்லாமலிருப்பது பெருங்கடலிலிருந்து வீசும் காற்று, கிழக்கிலிருந்து மேற்கு வரையுள்ள அதிக பரப்பளவு மற்றும் சூழல். சஹாராவின் மேற்கு எல்லைகள் முழுவதும் வீசும் (கெனரி காற்றுகள்) மற்றும் கலஹரியின் மேற்கு கடற்கரைப் பகுதியுடன் சேர்ந்து வீசும் ஷீதா பெருங்கடல் (பெனகுவேலா காற்று) காற்றுகள், கடலோர தாழ்நிலப்பகுதிகளைச் சேர்ந்த பகுதிகளின் வெப்ப அளவைக் குறைக் கிறது. இவை இரண்டும் குளிர்காற்றுகளாதலால் அதிக மழையைக் கொண்டுவருவதில்லை. ஆனால் தென்கிழக்கு கடற்கரைப் பகுதியுடன் ஒன்றிப் பாயும் மொசாம்பிக் வெப்பக்காற்று, அதிக ஈரத்தன்மையை ஏற்படுத்

©KTBS Not to be republished


துவதல்லாமல் மழையையும் பொழிகிறது. உயரமான மலைகள் இல்லாமலிருப்பது, தட்ப வெப்ப நிலைப் பிரிவுகள் இங்கு வெப்பக் காற்றுகளின் தடையற்ற இயக்கத்திற்கு வழிவகுக்கிறது. ஆதலால் தட்பவெப்ப நிலையில் மாற்றங்கள் மெதுவாக ஏற்படுகின்றன.

ஆப்பிரிக்காவின் தட்ப வெப்ப நிலையில், மழையின் பங்கீடு பெரும் பங்கு வகிக்கிறது. இப்பிரதேசங்களின் சராசரி வருடாந்திர மழை 200 செ.மீ. ஆகவும், நிலநடுக்கோட்டிலிருந்து தூரம் செல்லச்செல்ல குறைந்து விடுகிறது. சஹாரா, கலஹரி மற்றும் நமீபியா பிரதேசங்களில் மழை, சுமார் 15 செ.மீ. ஆக உள்ளது. கேமரூன் ஆப்பிரிக்காவின் மிக ஈரமான பகுதியாகவும், அது சுமார் 1016 செ.மீ. சராசரி வருடாந்திர மழையையும் பெறுகிறது.

### தட்பவெப்ப நிலைகள்

தட்ப வெப்ப நிலையின் அடிப்படையில் ஆப்பிரிக்கா கண்டத்தை கீழ்க்காணும் எட்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. நிலநடுக்கோட்டு மழைபிரதேசம்
2. சவன்னா மாதிரி பிரதேசம்
3. வெப்ப மண்டல பாலைவனப் பிரதேசம்
4. மெடிட்டரேனியன் பிரதேசம்
5. மிதவெப்ப புல்வெளி பிரதேசம்




**ஆப்பிரிக்காவின் தட்பவெப்பநிலைப் பிரதேசங்கள்**

Not to be republished ©KTBS

6. மேட்டு நிலங்கள்

7. ஈரமான உப வெப்ப மண்டலம்

8. வறண்ட குளிர்காலம் நிலவும் உப வெப்ப மண்டலம்.

**1. நிலநடுக்கோட்டு மழைப் பிரதேசம் :** இது தாழ்நிலப் பகுதிகளில் நிலநடுக்கோட்டின் இரு பக்கங்களிலும் காணப்படுகிறது மற்றும் காங்கோ தாழ்நிலத்திலிருந்து. கினியா வரை பரந்துள்ளது. இங்குள்ள தட்ப வெப்ப நிலை வெப்பமானது மற்றும் வருடந்தோறும் மழையைப் பெறுகிறது. ஒவ்வொரு மதிய நேரத்திலும் கனமழை (Downpour) பெய்கிறது. மரபு வழி (Convectional) மழை வகையை சேரும் அதிகமான வெப்பம் மற்றும் ஈரக்கசிவான நிலைமைகள் இருப்பதால் இங்குள்ள தட்பவெப்ப நிலை உவகையற்றதாக விளங்குகிறது.

**2. சவன்னா மாதிரி தட்ப வெப்ப நிலை பிரதேசம் :** இது சொமாலியா, இதியோபி யா, சுடான், சாட் மற்றும் நைஜர் பகுதிகளை உள்ளடக்கும். இந்த தட்பவெப்ப நிலைமை பெரும்பாலும் சுடானில் காணப்படுகிறது. எனவே இதை 'சுடான் மாதிரி தட்ப வெப்ப நிலை' என்றும் அழைப்பர். இங்கு அதிகமான வெப்ப அளவு உள்ளது. தாழ்நிலப் பகுதிகளைவிட கிழக்குப் பகுதியின் மேட்டுநிலங்களில் வெப்பளவு குறைவாகவும், கோடைகாலத்தில் அதிக மழையும் பெய்கிறது.

**3. வெப்ப மண்டல பாலைவனப் பிரதேசம் :** ஆப்பிரிக்கா கண்டத்தின் வடப் பகுதி மற்றும் தென்பகுதிகளிரண்டிலும் பாலைவனங்கள் உள்ளன. இப்பிர தேசங்களில் அதிக வெப்பமான கோடைக்காலமும் மிகுந்த குளிர்ச்சியான குளிர்க்காலமும் உள்ளது. பகல் மற்றும் இரவு நேரங்களின் வெப்ப அளவில் அதிகமான மாற்றங்கள் காணப்படுகின்றது. மழை குறைவு மேகமூட்டம் அரிது.

**4. மெடிட்டரேனியன் தட்ப வெப்ப நிலைப் பிரதேசங்கள் :** ஆப்பிரிக்கா கண்டத்தின் வட கடற்கரைப் பகுதி மற்றும் தென் முனைப் பகு திகளில் இப்படிப்பட்ட தட்ப வெப்பநிலை காணப்படுகிறது. இப்பிரதேசங் களில் மொராக்கோ, வட அல்ஜீரியா மற்றும் கேப் மாகாணங்கள் சேரும். அதிக வெப்பம் மற்றும் வறண்ட கோடைக்காலமும் மழையுடன் கூடிய குளிர்காலமும் இத்தட்ப வெப்ப நிலையின் முக்கிய அம்சங்களாகும். இது மட்டுமே குளிர்காலத்தில் மழையைப் பெறும் பிரதேசமாகும்.

**5. மித தட்ப வெப்ப சமவெளி பிரதேசங்கள் :** இதை வெல்டு பிரதேசங் களென்றும் அழைக்கலாம். டச் மொழியில் வெல்ட்ஸ் (Veldts) என்றால் துறை என்று பொருள். இந்த தட்ப வெப்ப நிலையுள்ள பிரதேசங்களைத், தென் ஆப்பிரிக்காவின் உள்நாடுகளில் காணலாம். இது கடற்கரையிலிருந்து

©KTBS Not to be republished

தொலைவில் உள்ளது. இதனால், குளிர்காலம் மற்றும் கோடைக்கால வெப் பளவில் அதிக வேறுபாடுகள் உள்ளன. கோடைக்காலத்தில் வெப்பளவு அதிகமாகவும், குளிர்காலத்தில் குளிர்ச்சியாகவும் இருக்கும். இவ்விரண்டு காலங்களிலும் மழையின் அளவு குறைவாகவே உள்ளது.

**6. உயரமான பிரதேசத்தின் தட்ப வெப்ப நிலை உள்ள பகுதிகள் :** இது இதியோபியாவின் உயரமான பகுதிகள் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவின் பகுதிகளை உள்ளடக்கும். கடல்மட்டத்தை விட உயரத்தில் உள்ள இப்பிர தேசங்களில் குளிர்ச்சியான தட்ப வெப்ப நிலை உள்ளது. மழைப் பங்கீடு குறைவு மற்றும் கோடைகாலத்தில் மட்டுமே மழை பெய்கிறது.


***7. ஈரமான-உபவெப்ப மண்டலம் தட்ப வெப்ப நிலையுள்ள பிரதேசங்கள்:*** இப்பிரதேசம் டிரேகன்ஸ் பர்க் மலைப்பகுதிகளிலிருந்து மடகாஸ்கர் உள்ளிட்ட. கிழக்கு கடற்கரைப் பகுதி வரை பரந்துள்ளது. கோடைக்காலத் தில் அதிகமான வெப்பம் மற்றும் மழை, குளிர்காலத்தில் குளிர் மற்றும் வறண்ட நிலைமை காணப்படுகின்றது.

**8. வறண்ட குளிர்காலம் உள்ள வெப்ப மண்டலம் :** இது ஆப்பிரிக்காவின் தென் கிழக்கு பகுதிகளை உள்ளடக்கும். கோடைகாலத்தில் அதிக வெப்ப மும் மழையும், மிதமான மற்றும் வறண்ட குளிர்காலமும் இத்தட்ப வெப்ப நிலையின் முக்கிய அம்சங்களாகும். நிலநடுக்கோட்டு தட்ப வெப்ப பிரதேசங்களைப் போன்ற மழைப் பங்கீடே இங்கும் காணப்படுகிறது. ஆயினும், உயரமான மற்றும் பருமனான பனிக்கட்டிகளினால், வெப்பளவு பங்கீட்டில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**இயற்கைத் தாவரங்கள் :** ஆப்பிரிக்காவின் இயற்கைத் தாவரங்களில் மாறுபாடுகளுள்ளன. ஏனென்றால் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தட்ப-வெப்ப நிலை, மண், மேற்பரப்பு அம்சங்கள் மற்றும் மனிதவாழ்க்கை இவைக ளிடையே பரஸ்பர நேரான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இக்கண்டத்தின் பல பகுதிகளிலுள்ள தாவர வகைகளில், மனித செயல்பாடுகளினால் மாற் றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும்பாலான காடுகளும், சமவெளிகளும், வெவ் வேறு மனித நோக்கங்களின் காரணமாக அழிக்கப்படுகின்றன மற்றும் சுட் டெரிக்கப்படுகின்றன. இதனால் ஆப்பிரிக்கா கண்டத்தில் தற்போது காணப்படும் தாவர வகைகள் அத்தனையும் 'இயற்கைத் தாவரங்களல்ல'.

நிலநடுக்கோட்டின் அதிகமான வெப்பம் மற்றும் வறண்ட தட்பவெப்ப நிலையானது அங்கு அடர்ந்த காடுகள் வளர வழி வகுத்துள்ளது. மரங்கள் உயரமாக வளர்கின்றன. நிலநடுக்கோட்டில் அமைந்துள்ள பசுமையான காடு களிலுள்ள தாவரங்களின் இலைகள் அகலமாகவும் கொடிகளாகப் படரும் தன்மையையும் பெற்றுள்ளன.

©KTBS Not to be republished




**இயற்கைத்தாவரங்கள்**

விசேஷ பண்புகள் பெற்றுள்ள வகை வகையான மரங்கள் இங்கு மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. ஆயினும் வெப்ப மண்டலத்தின் விலையுயர்ந்த வலிமையான மரங்களான ரப்பர், பீட் எபோனி, சின்கோனா, தேக்கு, கருங்காலி முதலிய மரங்கள் இங்கு வளர்கின்றன. மாங்குரோவ் தாவரங்களும் கடலோரக் காட்டு சதுப்பு நிலப்பகுதி களில் வளர்கின்றன.



**பே அப்யாப் மரம்**

எப்பொழுதும் பசுமையாகவே இருக்கும் நிலந டுக்கோட்டுக் காடுகளினால் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் முட்செடிகள் மற்றும் பவோபாப் (Baobab) மரங்களினாலான அடர்ந்த சவன்னா காடுகள்,

©KTBS Not to be republished

முட்புதர்கள் மற்றும் புல்வெளிகளுக்கு வழிவகுத்துக் கொடுக்கின்றன. முட்புதர்கள் மற்றும் பைன், ஜனிபர், கார்க், சிடார், ஃபிக் மற்றும் ஆலிவ் மரங்கள் மெடிட்டரேனியன் தட்ப வெப்ப நிலையிலுள்ள பிரதேசங்களில் காணப்படுகின்றன.

பீடபூமிகளின் உயரமான பகுதிகளில் மலைத்தாவரங்களும் (பவோபாப் மரம்) சஹாரா மற்றும் கலஹரி பகுதிகளில் பாலைவனத் தாவர இனங்களும் உள்ளன. தென் ஆப்பிரிக்காவின் கர்ரூ பகுதியில் புகழ்பெற்ற குகுசலு தாவர இனமும் நைல் நதிக்கரையில் 'சட்' என்னும் விசேஷ தாவர இனமும் உண்டு.

## விலங்குச் செல்வம்

ஆப்பிரிக்காவின் காட்டு விலங்குகளில் பலவகை உண்டு. இங்குள்ள தட்ப வெப்ப நிலை, மேற்பரப்பு அம்சங்கள், காடு, மண்வகைகள் மற்றும் ஆசியாவுடனும், ஐரோப்பாவுடனும் உள்ள தொடர்பு- பலவகை விலங்குகள் இங்கு இருப்பதற்கான காரணங்களாகும். மழை மற்றும் காட்டுப்பகுதிகள் பல விலங்குகளுக்கு அடைக்கலம் அளிக்கின்றன. சிம்பான்ஜி, வெவ்வேறு இனக்குரங்குகள், கொரில்லா, காட்டெருமை, சிறுத்தை மற்றும் இதர விலங்குகள் இங்கு காணப்படுகின்றன.










**முக்கிய வன விலங்குகள்**

முதலைகளும், நீர்யானைகளும் நதிகள் மற்றும் நீரினால் சூழப் பட்டுள்ள சதுப்பு நிலப்பகுதிகளில் காணப்படுகின்றன. கவர்ந்தி முக்கக் கூடிய வெவ்வேறு வண்ணப்பறவைகள் இங்கு சர்வ சாதாரணமாகக் காணப்படு கின்றன. எ.கா: தீக்கோழி, கருடன், கழுகு முதலியன.

ஜீப்ரா, காட்டுப்பூனை, ஜிராஃபெ, காண்டாமிருகம், யானை, சிறுத்தை மற்றும் ஆப்பிரிக்க சிங்கங்கள் வெப்ப மண்டலத்தின் புல்வெளிகளிலும், சவன்னா பிரதேசங்களிலும் காணப்படுகின்றன.

பாலைவனப்பகுதிகளில் தேள், ஒட்டகம், பல்லி, பாலைவன நரி, மற்றும் பலவகை பூச்சிகள் காணப்படுகின்றன. இதனுடன் மான் இனத்தைச் சேர்ந்த கழுதை, குதிரை மற்றும் அட்டாகஸுக்கள் காணப்படுகின்றன.





**படம் 15.5 இம்பாலா மற்றும் அட்டாக்ஷ்கள்**

©KTBS Not to be republished

ஒட்டகம் சிறப்பு வாய்ந்த மற்றும் எல்லோரும் அறிந்த பாலைவன விலங்காகும். இதை சிலசமயங்களில் பாலைவனக் கப்பல் என்றும் அழைப்பர்.

**தீக்கோழி :** இது ஆப்பிரிக்காவின் மூலவாசியாகும், கலஹரி பாலைவனம் மற்றும் ஆப்பிரிக்காவின் தென் மைதானங்களில் காணப்படுகின்றன. இது உலகிலேயே பலநாட்கள் உயிர்வாழும் மிகப்பெரிய பறவையாகும். உலகிலேயே மிகப் பெரிய முட்டையையும் இடுகின்றது. இதற்கு பறக்க இயலாது. ஆனால் மிக வேகமாக ஓடும் பறவை. தனது கால்களில் இரண்டு விரல்களைப் பெற்றுள்ள ஒரேப் பறவையாகும்.



**தீக்கோழி**

# 5. வேளாண்மையும், தொழிற்சாலைகளும்.

ஆப்பிரிக்காவின் பல நாடுகளில் வேளாண்மை மக்களின் முக்கிய பொருளாதாரம் திரட்டும் செயல்பாடாகும். சுமார் 75%க்கும் அதிகமான மக்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.

நிலநடுக்கோட்டுப் பகுதியைத் தவிர ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் வேளாண்மை மக்கள் வாழ்க்கையின் ஆதாரமாக விளங்குகிறது. நவீன வகை உரங்களும், பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடும் குறைவு. பல இடங்களில், வேளாண்மை கைகளால் செய்யப்படுகிறது. மனித உழைப்பால் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஹெக்டேரிலிருந்து கிடைக்கும் விளைச்சலும் குறைவு.

பல வேளாண் பகுதிகளில் உணவுப் பயிர்கள் முக்கியமாக விளைக்கப் படுகின்றன. மக்காச்சோளம், நெற்பயிர், தினை, சர்க்கரை வள்ளிக்கிழங்கு மற்றும் வள்ளிக்கிழங்கு, வேர்கடலை, பட்டாணி மற்றும் மாவுப்பயிர்கள் முதன்மையானவை. நிலநடுக்கோட்டுப் பகுதிகளிலுள்ள தட்ப வெப்ப நிலைப் பகுதிகளில் தோட்ட விவசாயம் முக்கியமானது. புருண்டி பிரதேசத்தில் ஏற்றுமதிக்காக காபியும், கோடே-டி-ஐவோரே மற்றும் கானாவில் கொக்கோவும், பட்டாணிகள் போன்றவை காம்பியா தேசத்திலும் பயிரிடப்படுகின்றன. ஆப்பிரிக்காவில் விளையும் மற்ற பயிர்கள், கரும்பு, வாழை, தேயிலை, தென்னை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் எலுமிச்சை இன பழங்கள்-இவை அத்தனையும் பெரிய எஸ்டேட்டுகளில் நீர்பாசன வேளாண் முறையின் மூலம் விளைவிக்கின்றனர். செனெகல், மாரிடானியா, மாலி, நைஜர், சாட், வடக்கு சுடான், இதியோபியா மற்றும் சோமாலியா நாட்டு மக்கள் (Sahel) மேலும் மேலும் பஞ்சத்தில் அடிபட்டு பட்டினியால் வாடுகின்றனர்.

ஆப்பிரிக்கா வெவ்வேறு வகையான பழங்களுக்கு புகழ் பெற்றது. மெடிட்டரேனியன் பகுதிகளில் எலுமிச்சை, ஆரஞ்சு, திராட்சை முதலியவை பொதுவாக வளர்கின்றன. கிழக்கு ஆப்பிரிக்காவில் முந்திரி விளைவிக்கிறார்கள். ஜான்ஜிபாரா தீவு மற்றும் டான்ஜனியா, லவங்கத்திற்கு புகழ்பெற்றவை..

இங்கு மாட்டுச்சோளம் முக்கியமான பயிராகும். சில பிரதேசங்களில் நெற்பயிர் மற்றும் கரும்பு பயிரிடுகிறார்கள். வணிகப் பயிர்களான காபி, தென்னை, நிலக்கிழங்குகளை மத்திய கிழக்குப் பகுதிகளிலும் ஆப்பிரிக்காவின் மற்ற பகுதிகளிலும் பயிரிடப் படுகின்றன. இதியோபியாவில் பல்லாயிரம் வருடங்களாக காபியை பயிரிட்டு வருகிறார்கள். எகிப்து நாடு பருத்திக்கு புகழ்பெற்றது.

ஐரோப்பியர்கள் வாழ்ந்த கென்யா, தென் ஆப்பிரிக்கா மற்றும் ஜிம்பாப்வேயில் கால்நடை வளர்த்தல் முக்கிய தொழிலாகும். உலகத்தின் கால்நடைகளில் 15% ஆப்பிரிக்காவில் உள்ளன.

©KTBS Not to be republished

## வேளாண்மை பின்தங்கியுள்ளதற்கான காரணங்கள் :

ஆப்பிரிக்காவில் வேளாண்மை பின்தங்கியிருப்பதற்கு பழமையான வேளாண் முறைகள், பழமையான வேளாண் உபகரணங்களின் பயன்பாடு, எழுத்தறிவின்மை, பொருளாதாரம் மற்றும் அயல்நாட்டுப் பொருளாதார சேமிப்பில் குறைபாடு, முதலியவை முக்கிய காரணங்களாகும்.

## தொழிற்சாலைகள் நிதானமாக வளர்ச்சியடைவதற்கான காரணங்கள்:

● ஆப்பிரிக்காவின் பல நாடுகள் நீர், காடு மற்றும் கனிம வளங்களில் சிறந்தவை. இவ்வியற்கைச் செல்வங்களின் பங்கீடு சமமாக இல்லை. இங்குள்ள பல நாடுகளின் பொருளாதார நிலைமை வேளாண்மையைச் சார்ந்துள்ளது.

● கடந்த நூற்றாண்டின் இடைக்காலம் வரையிலும் ஆப்பிரிக்காவின் இயற்கைச் செல்வம் ஐரோப்பியர்களால் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டிருந்ததால், தொழிற்சாலைகளின் வளர்ச்சியில் பங்கம் ஏற்பட்டுள்ளது. இதனுடன், தொழிலாக்கத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளின் குறைபாடு, பொருளாதார தட்டுப்பாடு, தொழில் நுட்பத் தட்டுப்பாடு, தேர்ந்த தொழிலாளிகளின் குறைபாடு, வாங்கும் ஆற்றலின் குறைபாடு மற்றும் அரசியல் பிரச்சனைகள் போன்றவை. ஆப்பிரிக்க நாடுகளில் தொழிற்சாலை முன்னேற்றத்தில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதற்கான காரணங்களாகும்.

● கடந்த பத்து ஆண்டுகளில் தொழிலாக்கத்திற்கு உட்பட்ட நாடுகள் ஜிம்பாவே, நைஜீரியா, எகிப்து, அல்ஜீரியா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகும். சுதந்திரம் அடைந்த பிறகு பல ஆப்பிரிக்க நாடுகள் சிறு தொழிற்சாலைகளான ஜவுளி தயாரித்தல், ஔடதம் மற்றும் உணவு வளர்ச்சி மற்றும் பான தொழிற்சாலைகளின் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுகின்றன.

● பெரிய தொழிற்சாலைகளான இரும்பு, எஃகு, ரப்பர், சிமெண்ட் மற்றும் பெட்ரோ வேதிப்பொருட்களின், தயாரிப்புகள் ஆப்பிரிக்காவில் கவனம் செலுத்தப் படுகின்றன. அல்ஜீரியா, டியூனிஸியா, எகிப்து மற்றும் ஜிம்பாவே நாடுகளில் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் உள்ளன. ஆப்பிரிக்காவின் மின்பொறிகள், போக்குவரத்து உபகரணங்கள், டிராக்டர் தயாரிப்பு மற்றும் போரில் பயன்படும் விமானங்களைக் கட்டும் மற்ற தொழிற்சாலைகளும் உள்ளன.


©KTBS Not to be republished

# 6. விலையுயர்ந்த கனிமங்கள்

## வைரம் மற்றும் தங்கம்

ஆப்பிரிக்கா கண்டம் அதிகமான கனிமச் செல்வத்தைப் பெற்றுள்ளது. விலையுயர்ந்த கனிமங்களான வைரம், தங்கம் மற்றும் பிளாட்டினம் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன.

**வைரம் :** உலகத்தின் மொத்த வைரப் புதையல்களில் 80% ஆப்பிரிக்காவிலேயே உள்ளது. ஜைரே மற்றும் தென்ஆப்பிரிக்கா அதிகமாக வைரம் உற்பத்தி செய்யும் நாடுகளாகும். கிம்பர்லி, ப்ரிடோரியா மற்ற பிரதேசங்களாகும். தொழிற்சாலை வைரத்தை வைரக்கல் மற்றும் தொழிற்சாலை வைரம் என்று வகைப்படுத்தலாம். வைரத்தைத் சிராய்க்கத் தேவைப்படும் பொருள் மற்றும் கத்தரிக்கும் உபகரணங்களை தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள்.





முக்கிய கனிமங்கள்

**தங்கம் :** உலகத்தில் பாதியளவு தங்கப் புதையல்கள் தென் ஆப்பிரிக்காவில் உள்ளன. தங்கப் புதையல்கள் பரந்துள்ள முக்கிய இடங்கள் விட்வாடர்ஸ்ராண்ட் (டிரான்ஸ்வால்) மற்றும் ஆரஞ்சு ஃப்ரீ ஸ்டேட் நாடுகளாகும். இக்கண்டத்தின் மொத்த தங்க உற்பத்தியில் 50% விட அதிக அளவு தங்கம் தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாவே மற்றும் காங்கோ குடியரசுகளில் காணப்படுகிறது.

# 7. மக்களடர்த்தி, பங்கீடு மற்றும் நெருக்கம்

உலகிலேயே முதன்முதலில் மனிதன் தென்பட்டதும் உபகரணங்களைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டதும் ஆப்பிரிக்காவில்தான் என்ற கருத்து நிலவுகிறது. மனித சாஸ்திர அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் கருத்தின்படி ஹோமோசேபியன்ஸினர் ஆப்பிரிக்காவின் கென்யா மற்றும்

©KTBS Not to be republished




**ஜனத்தொகையின் பங்கீடு**

இதியோபியாவிலுள்ள கிழக்கு குளத்தினருகே தென்பட்டனர் என்று தெரிய வந்துள்ளது.

முக்கியமாக ஆப்பிரிக்கா, நீக்ரோ மற்றும் அவர்களுடைய ஆதிவாசிகளின் குழுக்களினால் ஆனது. இப்பொழுது ஆப்பிரிக்காவில் வெவ்வேறு பரம் பரையினரும் இனத்தவரும் உள்ளனர். இக்கண்டத்தில் பல மக்கள், மொழி மற்றும் கலாச்சாரம் கலந்துள்ளது.

சுமார் 1051 மில்லியன் மக்கள் ஆப்பிரிக்கா கண்டத்தில் வாழ்கின்றனர். நைஜீரியா, எகிப்து, இதியோபியா, ஜைரே மற்றும் தென் ஆப்பிரிக்கா அதிகமான மக்கட்தொகை நெருக்கமுள்ள பிரதேசங்களாகும். கடந்த முப்பதாண்டுகளாக ஆப்பிரிக்காவின் சில நாடுகளில் மரணங்களின் சதவீதம் குறைந்துள்ளது. அதிகமான உணவு உற்பத்தி, ஔடதங்கள் தருவித்துக் கொடுத்தல் மற்றும் சுகாதார முறைகளில் முன்னேற்றம், இதற்கான காரணங்களாகும். இதனால் பிறப்பு வீதம் உயர்ந்து அதிக மக்கட்தொகை நெருக்கத்தை ஏற்படு

தியுள்ளது. உலகளவில் ஒப்பிட்டு பார்க்கும்பொழுது ஆப்பிரிக்காவின் மக்கட் தொகை நெருக்கம், உலகத்தின் சராசரியைவிட அதிகமாக உள்ளது. சில நாடுகளான சோமாலியா இதியோபியா, சாட், நைஜீரியா, மாலியில் மக்களின் வாழ்நாட்கள் மிகக் குறைவு, அதாவது 50 வருடங்கள் மட்டுமே ஆகும்.

மக்கட்தொகை பங்கீட்டில் சமமான நிலைமை காணப்படுவதில்லை. மிக அதிகமான மக்கட்தொகை நெருக்கம் ஆப்பிரிக்காவின் கினியா கடற்கரைப் பிரதேசம் நைல் நதிக்கரை, கிழக்கு ஆசியாவின் மேட்டு நிலங்கள், மடகாஸ்கர் வடக்கு கடலோரப் பகுதி தென் ஆப்பிரிக்கா, சுரங்க நகரப் பகுதிகளான ஜிம்பாவே, மற்றும் ஜைரே மற்றும் கினி பிரதேசங்களில் உள்ளது.

குறைந்த மக்களடர்த்தி, பாலைவனம், மலைப்பிரதேசங்கள் மற்றும் நிலநடுக்கோட்டுப் பகுதியின் அடர்ந்த காடுகளில் உள்ளது. லிபியாவின் சஹாரா மற்றும் அல்ஜீரியாவில் மக்களடர்த்தி குறைவாக உள்ளது. அங்குள்ள மக்களடர்த்தி ஒவ்வொரு ச.கி.மீ.க்கு 15 மக்கள் ஆகும்.

**ஆப்பிரிக்க மக்களை நான்கு குழுக்களாகப் பிரிக்கலாம் :**

1. பிக்மிகள், புஷ்மென் மற்றும் மசாயி. இவர்கள் சஹாரா பாலைவனத்தின் தென் பகுதியில் வசிக்கின்றனர்.
2. அரேபியர், வட ஆப்பிரிக்காவில் வசிக்கின்றனர்.
3. இந்தியர்கள் தெற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் வசிக்கின்றனர்.
4. ஐரோப்பியர், தென் அமெரிக்காவிலும், மற்ற செழிப்பான நதிக்கரையோரப் பகுதிகளிலும் வசிக்கின்றனர்.

**புதிய சொற்கள்**

தீபகற்பம், விரிகுடா (பிளவுப்) பாலைவனம், ஏரிகள், மக்களின் வாழ்நாட்கள், மக்களடர்த்தி, தீர்கரேகை, வளைகுடா, கடக ரேகை, மகர ரேகை, சவன்னா.

**அறிந்து கொள்க :**

- நைல் நதியின் நீண்ட பெருமளவு பகுதி சஹாரா பாலைவனத்தின் வழியாகச் செல்கிறது. ஆயினும் அது எப்பொழுதும் வறண்டு போவதில்லை. நைல் நதியின் நீர்பிடிப்பு பகுதிகளில் போதுமான அளவு மழை பெய்வதே இதற்கான காரணம் ஆகும்.

©KTBS Not to be republished

- சஹாரா பாலைவனம் ஆப்பிரிக்காவின் வடப்பகுதியைச் சூழ்ந்துள்ளது. இது உலகத்திலேயே பெரிய பாலைவனமாகும்.
- லிபியாவின் இல் அஜி ஜியாவில் உலகிலேயே அதிக அளவு வெப்பளவு 50° செல்ஷியஸ் ஆக பதிவாகியுள்ளது.
- அட்டாக்ஷ் எனப்படும் விலங்கு, நீளமான முறுக்கிய கொம்புகளைப் பெற்றுள்ள மான்வகையாகும். இது நீரைப் பருகாது. மாறாக, தனக்கு தேவையான நீரை, தான் உண்ணும் புல்லிலிருந்தும் தாவரங்களிலிருந்தும் பெற்றுக் கொள்கிறது.
- ஆப்பிரிக்காவில் பேஅப்யாப் என்ற மரம் உள்ளது. இது பாட்டில் வடிவத்தில் உள்ளது. இதனுடைய தண்டுப்பகுதி நீரைச் சேமித்து வைத்துக்கொள்வதற்கு ஏற்ப உப்பலாக உள்ளது. இது 1000லிருந்து 12,000 லிட்டர் நீரைத் தேக்கி வைத்துக்கொள்ள முடிகிறது. பயணிகள் தாகமாக இருந்தால் சில சமயங்களில் இந்த மரத்தின் நீரைப் பருகுகிறார்கள்.
- உலகத்தின் 24% காபி, ஆப்பிரிக்காவில் உற்பத்தியாகிறது.
- பிக்மிக்கள், உலகிலேயே குட்டையான மனிதர்களாவர். அவர்கள் காங்கோ பள்ளத்தாக்கில் வசிக்கின்றனர்.
- உலகத்தில் 50 சதவீதத்தை விட அதிகளவு கொக்கோவை ஆப்பிரிக்கா மட்டுமே உற்பத்தி செய்கிறது.
- ஆப்பிரிக்க மக்கள் அதிக பலசாலிகள். ஆயினும் அவர்களுடைய வாழ்நாட்கள் குறைவு.
- ஆப்பிரிக்கா கண்டத்தில், 800 க்கும் அதிகமான மொழிகளைப் பேசுபவர்கள் உள்ளனர்.
- ஆப்பிரிக்காவில் கிராமங்களில் மக்கள் தொகை அதிகம். இது குறைவான நகரங்கள் உள்ள கண்டமாகும்.

**குழுக்களில் விவாதித்து விடையளி:**

1. ஆப்பிரிக்கா 'இருட்டு கண்டம்' என்று ஏன் அழைக்கப்படுகிறது?
2. ஆப்பிரிக்காவை மத்திய கண்டம் என்றழைப்பர் ஏன்?
3. வளைகுடா என்றால் என்ன? ஆப்பிரிக்காவின் வளைகுடா யாது?
4. ஆப்பிரிக்காவின் தாழ்நிலப் பகுதிகளைக் குறிப்பிடுக.
5. ஆப்பிரிக்காவின் மிக உயரமான மலைச்சிகரம் யாது?

©KTBS Not to be republished

6. ஆப்பிரிக்கா கண்டத்தின் வெவ்வேறு தாவர வகைகளைக் குறிப்பிடவும்.
7. ஆப்பிரிக்காவின் மிக நீளமான நதி யாது?
8. ஆப்பிரிக்காவின் முக்கிய உணவுப் பயிர்கள் யாவை?
9. வைரப் புதையல்கள் உள்ள ஆப்பிரிக்க நாடுகள் யாவை?

**செயல்பாடுகள் :**

1. ஆப்பிரிக்கா கண்டத்தின் பிளவு பள்ளத்தாக்கில் காணப்படும் முக்கிய ஏரிகளை உலக வரைபடத்தில் குறிப்பிடவும்.
2. ஆப்பிரிக்காவின் முக்கிய நதிகள் மற்றும் மலைகளைக் குறிப்பிடவும்.
3. கர்நாடகத்தில் காணப்படும் பே அப்யாப் (பாட்டில் வடிவ) மரத்தின் படத்தை சேகரிக்கவும்.
4. ஆப்பிரிக்காவின் அட்டாக்ஷ் மற்றும் நமது நாட்டின் மான்களை ஒப்பிட்டு எழுதுக.

* * * * *

©KTBS Not to be republished